# கீரனூர்க்
# காணியாளர்கள் வரலாறு

ஆதிகுலம், அந்துவன்குலம், காடைகுலம்,
விலையன்குலம், தேவேந்திரன்குலம், கீரைகுலம்

73

புலவர் செ. இராசு எம்.ஏ.,

...ங்கு ஆய்வு மையம்
...லைக்கழகக் குடியிருப்பு
...வூர்-613 005.

Y592KA.21194.K
NS2
195975

வெளியீடு : ஸ்ரீரா்ஞா அருள்மிகு செல்வநாயகியம்மன்
குடமுழுக்கு விழா நாள், 9-7-1992

இந்த நூல், கொங்கு ஆய்வு மையத்தில் கிடைக்கும்.

விலை : ரூ. 15-00

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை-600 014.

# ஆசிரியர் உரை

கொங்கு மண்டலத்துக் காங்கேய நாட்டின் தொன்மை யான ஊர்களில் கீரனூர்' ஒன்றாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க 'கீரனூர்க்' காணியாளர்களின் குலதெய்வம் அருள்மிகு செல்வநாயகியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னாளில் இவ் வரலாற்று நூல் வெளியிடப்படுகிறது.

இலக்கியம், தனிப்பாடல், செப்பேடு, கல்வெட்டு, ஓலைச் சுவடிகள், வரலாற்று ஆவணங்களிலிருந்து பல செய்திகள் ஏற்ற தலைப்புக்களில் இடம் பெற்றுள்ளன.

இச்செய்திகள் நூலாக்கம்பெறத் திருவாளர்கள் காங்கேயம் பழனிச்சாமிக் கவுண்டர், தம்மரெட்டிபாளையம் டி.எம் பாட்டைய கவுண்டர், செல்லப்பம் பாளையம் எஸ். எம். சென்னிமலைக் கவுண்டர், தம்மரெட்டிபாளையம் நாச்சி முத்துக் கவுண்டர், சூலக்கல் நாட்டராயக் கவுண்டர், திட்டம் பாளையம் அப்புக்குட்டிக் கவுண்டர் ஆகியோர் உள்ளிட்ட திருப்பணிக் குழுவினர் பொருட் கொடை வழங்கினர்.

காணியாளர்களான திருவாளர்கள் திருப்பூர் 'பெஸ்ட்' எஸ். இராமசாமி, ஈரோடு வழக்கறிஞர் பி. சி. பழனிசாமி டாக்டர் எஸ். எஸ். சின்னசாமி, எஸ் முத்துக்குமார், ஈ. எஸ். முத்துசாமிக் கவுண்டர். ;வி.கே.எம். பொன்னுசாமிக் கவுண்டர், கவுந்தப்பாடி டாக்டர் இராமசாமி, சின்னியம் பாளையம் எஸ்.கே. பரமசிவம் ஆகியோரும் பொருட் கொடை வழங்கினர்.

அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
5.7.92.

அன்பன்
புலவர் செ. இராசு

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | ... | iii |
| 2. | கொங்கு நாடு | ... | 1 |
| 3. | காங்கேய நாடு | ... | 5 |
| 4. | சிவன் மலை | ... | 13 |
| 5. | கீரனூர் | ... | 21 |
| 6. | கீரனூர்க் காணியாளர்கள் | ... | 26 |
| 7. | குல குருக்கள் | ... | 32 |
| 8. | வரலாற்று ஆவணங்களில் காணியாளர்கள் | ... | 57 |
| 9. | கீரனூர்ப் புலவர் பட்டயம் | ... | 60 |
| 10 | சோழன் பூர்வபட்டயத்தில் கீரனூர் | ... | 63 |
| 11. | செல்லாண்டியம்மன் | ... | 69 |
| 12. | செல்வநாயகியம்மன் கோயில் | ... | 75 |
| 13. | கீரனூர்க் கோயில்கள் | ... | 83 |
| 14. | கீரனூர்க் கல்வெட்டுக்கள் | ... | 89 |



அருள்மிகு செல்வநாயகி அம்மன்

# கொங்கு நாடு

நம் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு களைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு நாடுகளையும் பழங்காலத்தில் கொண்டிருந்தது.

கொங்குநாடு எப்பொழுதும் தனி எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் ஆகியவைகளைக் கொண்டு விளங்கியது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப் படுத்துகின்றன. நீலகிரி, கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், திண்டுக்கல் அண்ணா மாவட்டப் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர். குளித்தலைப் பகுதிகளுமே பழைய கொங்கு நாடாகும்.

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு.

என்பது ஒரு தனிப்பாடல். இதன்மூலம் கொங்கு நாட்டில் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை வெள்ளியங்கிரி மலை என்றும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் பெறப்படும்.

தொண்டை நாடு, கொங்கு நாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே

இருந்தது. தண்டியலங்காரம் என்னும் நூலின் மேற்கோள் பாடல் ஒன்று 'வியன் தமிழ்நாடு ஐந்து' என்று கூறுகிறது.

'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன்—துறையின்
விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகும் கோ'

என்பது அப்பாடலாகும்.

சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மையான தாகக் கருதப்படுகின்ற திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து' என்று கூறுகிறது. எனவே கொங்கு நாடு தனிப் பிரிவு என்பது உறுதிப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்கு நாடு' தனி நாடாகக் குறிக்கப்பெறுகிறது.

'கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே' (புறநானூறு 373) எனச் சோழன் அழைக்கப்பெறுகின்றான். அவன் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்திய செய்தி இதன் மூலம் பெறப்படுகிறது.

'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்'

'ஒளிறுவாள் கொங்கர்'

'ஆகெழு கொங்கர் நாடு'

'கொங்கர் ஆபரந்தன்ன'

'கொங்கர் படுமணி ஆயம்]
நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா'

'வாடாப் பூவின் கொங்கர் ஒட்டி'

'கொங்கர் மணியரை யாத்து
மறுகின் ஆடும் உள்ளி விழவு'

போன்ற சங்கப் பாடல்கள்மூலம் கொங்குக் குறுநில மன்னர்கள், கால்நடைச் செல்வம், கொங்கர் போர்த் திறன், அவர்கள் விழா ஆகியவை சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறுகின்றன.

கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த சிற்றரசர்கள் சங்க இலக்கியத்தில் அதியமான், ஆய், ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன், ஏற்றை, ஓரி, கங்கன், கட்டி, கடியநெடு வேட்டுவன், குமணன், கொடுமுடி, கொண்கானங் கிழான், தாமான் தோன்றிக்கோன், நன்னன், பழையன், புன்றுறை, பேகன், விச்சிக்கோ ஆகியோர் சுட்டிக் கூறப் பட்டுள்ளனர்.

சேரன் செங்குட்டுவன் தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ் நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக் கிறான். நூற்றுவர் கன்னர், இலங்கைக் கயவாகு, மாளுவ வேந்தர், பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகின்றோம்.

பேரூரை மேற்குக் கொங்கு என்று பாண்டியர் பழஞ் செப்பேடுகளும், இலக்கியங்களும் கூறுகின்றன.

'குடகொங்கத்து அடல்மன்னனைக்
கொல்களிற் றொடும் கொண்டுபோந்து
கொடியணிமணி நெடுமாடக்
கூடல்மதில் அகத்துவைத்தும்'

என்று சீவரமங்கலச் செப்பேட்டிலும்,

'மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்'

என்று சுந்தரர் தேவாரத்திலும் குறிப்புக்கள் வருகின்றன. இதனால் கொங்குநாடு தனிநாடு என்பது பெறப்படுகிறது.

சிலப்பதிகாரத்திலும் கொங்கு நாட்டின் மேற்குப் பகுதி அரசர் 'குடகக் கொங்கர்' என்று குறிக்கப் பெறுகிறார். கண்ணகியே 'கொங்கச் செல்வி' என்று அழைக்கப்பட்டுள்ளார்.

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுகளும், செப்பேடு களும் கொங்கு நாடு தனி நாடு எனக் கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழ நாட்டுடனும், கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர்.

# காங்கேயநாடு

## கொங்கு 24 நாடு

கொங்கு நாட்டில் குடியேறிய வேளாளர்கள் நாடெங்கும் சென்று பல ஊர்களில் காணி கொண்டு நிலையான ஆட்சியை ஏற்படுத்தினர். ஆங்காங்கு குளம் தொட்டு வளம் பெருக்கினர். ஆலயங்கள் கட்டி வழிபாடு செய்து கொடைகளும் பற்பல விட்டனர். தங்களுடன் குடியேறிய குடி படைகளுக்கும் பல உரிமை களை அளித்தனர். கால்நடைச் செல்வத்தைக் காத்து வேளாண்மையை மேற்கொண்டனர். அப்போது நாட்டு நிர்வாகம் செய்யக் கொங்கு நாட்டை 24 உள் நாடு களாகப் பிரித்தனர்.

## கொங்கு 24 நாடுகளாவன

1. பூந்துறை நாடு
2. தென்கரை நாடு
3. காங்கேய நாடு
4. பொன்கலூர் நாடு
5. ஆறை நாடு
6. வாரக்க நாடு
7. திருவாவினன்குடி நாடு
8. மண நாடு
9. தலைய நாடு
10. தட்டய நாடு
11. பூவாணிய நாடு
12. அரைய நாடு
13. ஒடுவங்க நாடு
14. வடகரை நாடு
15. கிழங்கு நாடு
16. நல்லுருக்கா நாடு
17. வாழவந்தி நாடு
18. அண்ட நாடு
19. வெங்கால நாடு
20. காவடிக்கா நாடு
21. ஆனைமலை நாடு
22. இராசிபுர நாடு
23. காஞ்சிக்கோயில் நாடு
24. குறுப்பு நாடு

பிற்காலத்தில் அரசர்கள் காடு கொன்று நாடாக்கி மக்களைக் குடியேற்றம் செய்யும்போது நாடுகள் பெருகின. சில பட்டயங்கள் கொங்கு 42 நாடு என்று கூறுகின்றன. காங்கேய நாடு மூன்றாவது நாடாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. 24 நாடுகளைக் குறிக்கும் பாடல் பின்வருமாறு :

சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு
 தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொங்கலூர் நாடுதிகழ் ஆறையணி
 தோய்ந்தவா ரக்கநாடு
வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
 மணநாடு தலையநாடு
வரதட்டை பூவாணி அரையநாடு ஒடுவங்கம்
 வடகரை கிழங்குநாடு
நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
 நாடுவெங் காலநாடு
காவலர்கள் சொல்கா வடிக்காநாடு ஆனைமலை
 ராசிபுர நாடுநிதமும்
இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
 இயல்செறி குறுப்புநாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான
 இருபத்து நான்குநாடே!'

காங்கேய நாடு 'தோன்றுகாங்கேய நாடு' என அடைமொழியுடன் கூறப்படுகிறது. புகழ்தோன்று நாடு, புண்ணியம் தோன்று நாடு, முன்தோன்றிய நாடு எனப் பல்வேறு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

## காங்கேய நாடு

காங்கேய நாடு கொங்கு நாட்டில் மிகவும் பழமை யான நாடாகக் கருதப்படுகிறது. கங்கைகுல வேளிருக்கு உரியது ஆதலின் காங்கேய நாடு ஆயிற்று என்பர் சிலர். கங்கையின் புதல்வன் முருகன், காங்கேயன் என்ற சிறப்புப் பெயர் பெற்றனர். அதுபோலக் கங்கைகுல வேளிர்களும் காங்கேயர் என்ற சிறப்புப் பெயர் பெற்றனர். சீய கங்கன் இப்பகுதியில் ஆட்சி புரிந்ததால் காங்கேயத்துக்கு 'சிங்கை' என்பது பெயராயிற்று என்பர் சிலர். காங்கேய ருக்குத் தலைநகராக இருந்த காரணத்தால் இவ்வூர் காங்கேயம் என்று பெயர் பெற்றது என்பது ஒரு காரண மாகும். இன்னும் சில ஆய்வாளர்கள் கங்கர்களின் தலை நகர் ஸ்கந்தபுரம் காங்கேயம்தான்; கங்கர்கள் ஆண்ட பகுதி காங்கேயம் ஆயிற்று என்பர்.

மெக்கன்சியின் ஆவணம் காடையூர்க் காங்கேயர் கோட்டை கட்டிய இடம் 'காங்கேயன் கோட்டை' என்று பெயர் பெற்றுப் பின் காங்கேயம் ஆயிற்று என்று கூறுகிறது. அவ்வூர்ப் பெயரே பின் நாட்டுக்கும் ஆயிற்று.

கொங்கு 24 நாடுகளில் காங்கேயம் மூன்றாம் நாடாகக் குறிக்கப்பெறுகிறது. பல்வேறு சிறப்புக்களைப் பெற்றது இந்தக் காங்கேயநாடு. இலக்கியங்களால் ஏத்திப் புகழப்பெறும் நாடு காங்கேய நாடு.

## காங்கேய நாட்டின் சிறப்பு

காங்கேய நாட்டில் ஓடுவது மாநதியின் நீர்தான். வீதியில் தேர்களே உயர்ந்து காணப்படுகின்றன, இரவலரைத் தேடித் தானதர்மங்கள் செய்யும்நாடு ங்கேய நாடு. அங்கு உள்ள கோயில்கள் செழித்துக்

காணப்படுகின்றன. அன்னக்கொடி கட்டித் தானதர்மம் செய்து இரவலர்க்குச் சோறு போடுவதால் அக்கொடிகளின் ஆட்டம் அங்குகாணப்படுகிறது. வேறு ஆட்டம் இல்லை. அதிர்வன முரசுகளேயாகும். எல்லோரும் பாடல்கள் இசைப்பர். இச் சிறப்புகளையுடையது காங்கேய நாடு என்கிறார் ஒருபுலவர்.

ஓடக் காண்பது மாநதி நீர்கள்
　　உயரக் கண்டது வீதியெங்கும் தேர்கள்
தேடக் கண்டது தானதன் மங்கள்
　　செழிக்கக் கண்டது தேவத் தலங்கள்
ஆடக் கண்டது அன்னக் கொடிகள்
　　அதிரக் கண்டது முரசு துடிகள்
பாடக் கண்டது கீதங்கள் யாரும்
　　பகரும் காங்கேய நாடெங்கள் நாடே!

எட்டுத் திக்குகளிலும் காங்கேய நாடு புகழ்பெற்றது. கொங்கு 24 நாடுகளிலும் தலைமையானது. அன்ன தானத்தில் சிறந்த நாடு. கலை வளரும் நாடு. முடி சூடிய தலைவர்கள் அரசு புரிவது. சிவன் மலையில் சீருடன் தேரோட்டும் நாடு. செல்வம் சிறக்கும் நாடு என்று ஒரு பாடல் காங்கேய நாட்டைப் புகழுகிறது.

அட்டதிசை யெங்கணும் அறுநான்கு நாட்டிலும்
　　அதிபவுசு பெற்ற நாடு
அரதேசி பரதேசி பசியாற என்னாளும்
　　அன்னம் பகர்ந்த நாடு

மட்டுள்ள குலமாதர் நடனசங் கீதமும்
　　வரிசைபல பெற்ற நாடு
வாகையுடன் நாட்டார்க்கு மணிமுடி சூட்டியே
　　வந்தரசு பெற்ற நாடு

திட்டமுடன் சக்திசிவன் மலைவே லவர்க்குத்
திருத்தேர் நடத்து நாடு
செம்மைமிகு பனிரெண்டு கிராமநாட் டாருக்கும்*
செல்வம் சிறந்த நாடு

கட்டுமுடி தவறாது வெட்டிச் செயங்கொண்டு
கனபவிசு பெற்ற நாடு
கனசென்னி மலைகாஞ்சி ஆன்பொருநை சூழ்கின்ற
காங்கயநன் னாடு தானே!

மேலும் கவிஞர் காங்கேய நாட்டின் வளத்தை விவரிக்கின்றார். நீர் வளமும், நிலவளமும், மக்கள் மனவளமும் அதனால் தெரிகிறது.

'முத்து ரத்னம் விளைவுள்ள நாடு
முனிவர் கேள்வி வளங்கொண்ட நாடு
சத்திர சாலை மிகுந்துள்ள நாடு
தடந்தோறும் தண்ணீர்ப் பந்தல்உள நாடு
நித்திய மங்கள கலியாண நாடு
நிறைந்த செல்வம் சிறந்துள்ள நாடு
மெத்த வீரம் விஜயம் புகழும்
விளங்கும் காங்கேய நாடெங்கள் நாடே'

'ரத்னம்' விளைவுள்ள நாடு என்பது மிகவும் அரிய உண்மை. காங்கேய நாட்டுப் பகுதியில் சிவன்மலை சூழ்ந்த பகுதியில் படியூர் உள்ளிட்ட ஊர்களில் பல வண்ணக் கற்கள் பன்னெடுங் காலமாய்க் கிடைக்கின்றன. சங்க காலத்தில் சேரர் ஆட்சிக் காலத்தில் அவை மணிகளாகச் செய்யப்பட்டும். பாசிகளாக உருவாக்கப்பட்டும்

---

* பிற்காலத்தில் ஆறுதொழு, ஆலாம்பாடி சேர்ந்து 14 கிராமங்கள் ஆயின.

ரோம் நாட்டுக்கு ஏற்றுமதி ஆயிற்று தமிழகப் பெண்களும் விரும்பி அணிந்தனர். காங்கேய நாட்டுக் கல்மணிகளை ரோம் நாட்டுப் பெண்கள் மிகவும் விரும்பி அணிந்தனர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கொடுமணல் அகழாய்வு அதனை மெய்ப்பிக்கிறது.

காங்கேய நாட்டு வேளாளர்கள், அந்தணர், ஞானியர், புலவர், தேவர்கள் ஆகியோருக்குக் குறை வில்லாமல் உணவளிப்போம் என்று மேழிக் கொடிகட்டி அன்னமிடக்கூடியவர்கள், அவர்கள் செல்வம் மிக்கவர்கள் அரசர்கட்கு முடிசூடும் உரிமை படைத்தவர்கள். இதோ புலவர் பாடும் புகழ் வரிகள்.

'மறைய வர்க்கும் மெய்ஞ்ஞானி யர்க்குங்கவி
வாண ருக்கும் சிறந்திடு தேவர்க்கும்
குறைவிலாமல் அனம்கொடுப் போம்எனக்
கூர்ந்து மேழித் துவசங்கள் கட்டிய
நிறைந்த செல்வசம் பத்துள்ள வேளானர்
நீதி மன்னர்க்கு மாமுடி சூட்டவே
இறைகு டிகள்எண் ணாயிரம் கோத்திரம்
இருக்கும் காங்கேய நாடெங்கள் நாடே'

வேளாளர் சடையப்ப வள்ளல் மரபினர் கொடுக்க வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டிய காட்சி இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

அடிமுடி தேடிய வரலாற்றில் பொய் சாட்சி கூறிய தாழைகள் காங்கேய நாட்டில் தவமிருந்து தம் பாவங் களைப் போக்குகிறதாம். தாழை மிகுதி என்பதைத் தற்குறிப் பேற்றமாகக் கவிஞர் புகழுகின்றார்.

'நார ணன்சது மாமறை வேதனும்
கண்பர் பாத மிகவும்கண் டேதொழ
வேறு ருபம் எடுத்து வரும்போது
விமலர் செஞ்சடை மீதிருந் தேவந்து
மாறு ரைத்த பவங்கள் தொலைத்திட
மாத வம்புரி வோர்என வேதிரு
நீற ணிந்துசோ றேந்திய தாழைகள்
நிற்கும் காங்கேய நாடெங்கள் நாடே'

காங்கேய நாட்டில் முல்லைப் பூக்கள் மிகுதி. மன்மத னுக்கு அம்பாகித் தான் செய்த தவறுகளுக்குப் பல்லைக் காட்டிக் கெஞ்சுவதுபோல முல்லைப் பூக்கள் மிகுதியாகப் பூத்தன என்று புலவர் பாடுகின்றார்.

'வில்லைக் காட்டும் மதனுக்கம் பாகியும்
மேலவர்க்கும் பிறவிக் கிதஞ்செய்து
வல்ல ரக்கர்செய் பவங்கள் தொலைக்கவும்
வகைகள் தான்தெரி யாமல் மலர்ந்துமே
அல்லக் காணிதற் கென்செய்கு வோமென
அயர்ந்து நந்த வனங்கள்எங் கெங்குமே
பல்லைக் காட்டியே கெஞ்சுவர் போன்முல்லை
படரும் காங்கேய நாடெங்கள் நாடே'

'தொல்லுலகில் அதிக புகழ்படைபெறும் காங்கயம்', 'அதிக காங்கேய நாடு', பெரும் காங்கயம்', நாட்டிலுயர் காங்கயம் 'நன்றான காங்கயம்'. எனப் புகழ்கொண்ட காங்கேய நாட்டின் இப்புகழுக்கும், மாபெரும் பெருமைக்கும் காரணமான ஊர்களில் நமது கீரனூரும் ஒன்றாகும். கீரனூர் காங்கேய நாட்டின் ஐந்தாவது ஊராக விளங்கும் பெருமை உடையது.

## காங்கேய நாட்டு ஊர்கள்

காங்கேயம், வள்ளிஎறிச்சல், காடையூர், பட்டாலி, கீரனூர், பார்ப்பதி, பரஞ்சேர்வழி, காரையூர், மருதுறை, முத்தூர், கண்ணபுரம், வெள்ளகோயில், ஆறுதொழு, ஆலாம்பாடி, ஆகிய 14 ஊர்களைக் காங்கேய நாடு தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இவைகளைத் தொகுத்துக் காங்கேய நாட்டு ஊர்த் தொகைப் பாடல் ஒன்றும் பாடியுள்ளனர்.

காங்க யத்துடன் வள்ளிதென் காடையூர்
 கந்தர் மேவிய பட்டாலி கீரனூர்
ஓங்கு பார்ப்பதி நற்பரஞ் சேர்வழி
 உற்ற காரை மருதுறை வெண்முத்தூர்
தேங்கு கண்ண புரம்வெள்ளை கோவிலும்
 சிறந்த ஆறுதொழு ஆலாம் பாடியும்
தீங்கி லாதகங் காகுல நாட்டார்
 செழிக்கும் காங்கய நாடெங்கள் நாடே!

என்பது அப்பாடலாகும்.

காங்கயம், காங்கேயம் என இருவகை வழக்கும் உள்ளது. இரண்டும் சரியான வழக்கேயாகும்.

# சிவன்மலை

கொங்கு நாட்டில் முருகப்பெருமான் உவந்து உறையும் குன்று தோறாடல் தலங்களுள் சிவன்மலையும் ஒன்று. சிவன்மலை, சிவமலை, சிவாசலம், சிவசைலம், சிவாத்திரி, சிவநாகம், சிவன்மாமலை, சிவகிரி என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கப்பெறும் சிறப்பினை உடையது. கீரனூரோடு நெருங்கிய தொடர்பு உடைய காரணத்தாலும், காங்கேய நாட்டுத் தலைமைத் தலம் ஆதலாலும் சிவன்மலை வரலாறு இங்கு கூறப்படுகிறது.

பொதுவாகக் காங்கேய நாட்டுத் தலைவன் சிவன் மலை முருகன் என்பது பண்டைய மரபு,

'தேங்கிய புகழ் எலாம்
ஓங்கியே சிறந்த சாங்கய நாடன்'

என்று சிவன்மலை முருகன் அழைக்கப்பெறுகின்றார்.

சிவன்மலையே காங்கேய நாட்டின் தலைமைத்தலம். ஆதலின், காங்கேய நாட்டு ஊர்த்தொகைப் பாடலில் சிவன்மலை சேர்க்கப்பெறுவதில்லை.

## ஊர்

பன்னெடுங் காலத்திற்கு முன் குறிஞ்சியும் முல்லையும் மிகப் பெருகிப் பரவியிருந்த காலத்தில் சிவன்மலை அடிவாரத்தில் ஊர் ஏதும் இல்லை. மலையைச் சார்ந்து காடுகள் மிகவும் அடர்ந்து இருந்

திருக்கவேண்டும். சிவன் மலையைச் சேர்ந்த ஊர், சிவன்மலைக்குரிய ஊர் அருகில் உள்ள பட்டாலியூரே யாகும்.

சிவன்மலை பட்டாலியுடன் இணைத்தே பல இடங்களில் குறிக்கப்பெற்றுள்ளது இதனை விளக்கும்

'அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை'

'பட்டாலிச் சிவாசலம்'

'ஞாலம் புகழும் பட்டாலிச் சிவமலை நன்னகர்'

என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன. பட்டாலி இலக்கியப் புகழ்பெற்ற பேரூர். அங்குள்ள பால் வெண்ணீசுவரர் நல்லமங்கையம்மன் இருவரின் மகனாகச் சிவன்மலை முருகன் குறிக்கப்பெறுவது அப்பழைய தொடர்பை நன்கு விளக்கும்.

'செல்வப் பட்டாலியில் பால்வண்ணர் பாலன்'

'செல்வப்பட்டாலி யூரன்'

'பத்தர் பணி பட்டாலிச் சித்தர்'

'சிகரகோ புரமும் தெருஇரு புறமும்
அகரசீ கரமும் அன்னசத் திரமும்
மாடமா ளிகையும் கூடகோ ளரையும்
நீடுறு ககனத்து ஆடிடு கொடியும்
அந்தணர் வேள்வியும் செந்தமிழ்க் கேள்வியும்
உந்திய குடிகள் உலவுசந் தடியும்
பூமலர் ஓடையும் மாமணி மேடையும்
பூமினார் ஆடலும் காமனார் கூடலும்
கிட்டாது வானமும் கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலி யூரன்'

என்று சிவன்மலை முருகன் குறிக்கப்பெறுகின்றார். ஆனால் இன்று பட்டாலி என்ற ஊர் அழிந்து அருகில் அரசம்பாளையம் என்ற ஊர் ஏற்பட்டுள்ளது.

## இறைவன்

சிவன்மலையில் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்து அருள்புரியும் சிவன்மலையாண்டவர் ஆகிய முருகப் பெருமான் சிவாசல வேந்தன், சிவன்மலைக் காங்கேயன், சிவாலத்திற் கந்தவேள், சிவசை விசாகன், சிவசயில முத்தையன், சிவமாமலைக் கந்தசுவாமி, சிவசைலக் குமரர், சிவன்மாமலை வேலன், சிவமலை வேள், சிவமலைக் குகன், சிவசுப்பிரமணியர். வள்ளி மணாளன், காங்கேயன் என்று பல்வேறு பெயர்களில் சிவன்மலையோடு இணைத்தும் தனியாகவும் கூறப்பெறுகிறார்.

## இலக்கியங்கள்

காங்கேய நாட்டு மடவிளாகத்தில் ஆதிசைவ மரபில் மார்க்கண்டேய கோத்திரத்தைச் சேர்ந்த தேவராச பண்டிதருக்கும், நஞ்சுண்டம்மாள் என்ற பெண்மணிக்கும் 1767இல் பிறந்தவர் இலட்சுமண பாரதி. தமிழகமெங்கும் சென்று தம் புலமையை நிலைநாட்டியவர். சேதுபதி அரசரால் பாரதி என்ற பட்டம் பெற்றவர். அவர் சிவன் மலைக் குறவஞ்சி பாடியுள்ளார்.

'திருமிகு சிவமலை வாழ்—முருகனே
சித்தர்கள் தினம் துதிக்கும் அத்தன் மகனே
சீதரன் மருமகனே—நம்பினோர்கள்
சிந்தனையைத் தீர்த்து வைக்கும் கந்நாதனே'

என்பது அவர் பாடிய ஒரு பாடலாகும்.

கொடுமணல், தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடமிருந்து பெற்று ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வரும் பல ஓலைச் சுவடிகளில் சிவன்மலையைப் பற்றிய பல்வேறு தனிப் பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று;

'தகைமைபெறு முப்பத்து முக்கோடி தேவரும்
தாமரைக் கண்ணன்உந்தி
தனில்வந்த நான்முகன் இந்திரன் மயேசுவரன்
சப்தரிஷி யுங்கூடியே
மகமேரு மத்தாக நாகமுங் கயிறாக
மதிநடு தறியாகவே
வாரியும் தாளியாய் வைத்தவர் யாவரும்
வந்தமிர்தம் கடையும்வேளை
பகவனொரு பாலிலே நின்றிடும் போதுகன
பாரம் பொறுக்காமலே
பாதாளம் ஆகுதென்று ஆயிரக் கலாமை
பாருரு வாய்ப்படர்ந்து
செகமெலாம் தாங்கியே வாழ்வுபெற வேவைத்த
திருமாலின் மருகாகுகா
தெய்வானை வள்ளிமண வாளன்என வந்தவா
சிவன்மலைக் குமரேசனே'

என்பதாகும்

## அருணகிரியார்

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை வருகை புரிந்து சென்னிமலையில் படிக்காசு பெற்றுக் கொங்குநாட்டில் பஞ்ச நிவாரணப் பணி செய்த அருணகிரிநாதர் பட்டாலி முருகனைப் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள மூன்று பாடல்களையும் சிவன்மலைப் பாடலாகவே நாம் கொள்ளலாம்.

'பயிரவி அருள் பட்டாலியூர்'
'பச்சோலை குலவு பனைவளர்
மைச்சோலை மயில்கள் நடமிடு பட்டாலி'

'கொங்கிற் பட்டாலி நகர்'

என்பவை அருணகிரிப் பெருமாள் பட்டாலியை வருணிக்கும் பகுதிகளாகும்.

சிவன்மலைக் குறவஞ்சியில் சிவன்மலையில் நக்கீரரின் திருமுருகாற்றுப் படையுடன், அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் படிக்கப்படுகிறது என்று கூறுவதும் நோக்கத் தக்கது

'நக்கீரர் தமிழ் உரைத்தே
நலம் பெருகும் வாசலிது'

'பொற்புடனே அருணகிரி திருப்
புகழ்படிக்கும் வாசலிது'

என்ற வரிகள் அருணகிரிநாதருக்கும் சிவன்மலைக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.

## கீரனூரும் சிவன்மலையும்

கீரனூரிலிருந்து சிவன்மலை நேர் தெற்காக மிக அருகில் அமைந்துள்ளது. கீரனூர் வாழ் மக்கள் தம் ஊரிலிருந்து கொண்டே சிவன்மலையை நினைத்த பொழுது கண்டு தரிசிக்கலாம். இரவு நேரத்தில் சிவன் மலை உச்சி, வழி விளக்குகளால் சோதிப் பிழம்புபோல் கீரனூர் மக்களுக்குக் காட்சி தரும். கீரனூர்க் காணியாளர் கள் சிவன்மலைக்குச் சென்று வழிபடுவதைத் தம் புண்ணியச் செயலாகக் கருதிச் சிவன்மலையை வழிபட்டு வருகின்றனர். கீரனூர்ப் புலவர்கள் சிவன்மலையைப் பாடிப் பரவியுள்ளனர்.

சிவன்மலைக் காணியாளர்கள் சிவன்மலைக்குச் செய்த எண்ணற்ற அரிய திருப்பணிகளைப் பற்றி மடவளாகம் இலட்சுமணபாரதி பாடிய சிவன்மலைக் குறவஞ்சியில் குறிப்பிட்டுள்ளார்.

கீரனூரில் ஆதி குலத்தைச் சேர்ந்த குப்பண்ண கவுண்டர் என்பவர் வாழ்ந்துவந்தார். அவர் சிவன் மலை முருகப் பெருமான் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர், நாள்தோறும் சிவன்மலை முருகப் பெருமானுக்கு நடைபெறும் மூன்று கால பூசைக்கும் வேண்டிய பூசைப் பொருட்களைப் பக்தியுடன் அனுப்பி வந்தார்.

சிவன்மலைத் திருப்பணியின் பொழுதும், சிவன் மலைத் தேரின் பொழுதும், அமாவாசை அன்றும் மிகவும் விசேடமாகப் பொருள்களை அனுப்புவார். தயிர், பால், சாம்பிராணி, நெய்க்குடம், தேங்காய் போன்ற பல பொருள்களை அனுப்புவார். காங்கேய நாட்டுக்கேயுரிய பால் தயிருடன் நெய்யைக் குடத்தில் அனுப்பினார் என்று கூறுவது சிறப்புக்குரியதாகும். அவர் அனுப்பிய பொருட்கள் உலுப்பை என்று பெயர் பெற்றது.

இதனைச் சிவன்மலைக் குறவஞ்சி.

'சேயன் திருமலை வேலர் திருப்பணிக்கும்
தேர்க்கும் பருவத் திதிஅமா வாசைக்கும்
தோயும் தயிர்பாலும் தூபசாம் பிராணியும்
குடம் நெடீயும் தேங்காயும் செந்தமிழை
ஆயும் கீரைநகர் ஆதிகுலக் குப்பணணன்
அந்திதிரி சந்தியிலும் அனுப்பும் உலுப்பை'

என்று புகழ்ந்து பாடுகிறது.

கீரனூரில் காடை குலத்தில் கருப்பண்ண கவுண்டர் என்பவர் வாழ்ந்து வந்தார், அவர் சிவன்மலைக்குச் செய்த திருப்பணிகள் ஏராளமானதாகும். கருப்பண்ண கவுண்டர் சிவன்மலையில் சத்திரம் கட்டினார். குளம் வெட்டினார். சந்நதி கட்டினார். சிவன்மலைக்குப் படிகள் அமைத்தார் கிணறு வெட்டி நீர் பாய்ச்சி நந்தவனம் அமைத்தார். இவ்வளவு கட்டிய கருப்பண்ண கவுண்டர் சிவன் மலை முருகன் திருமுன்னர் மூன்று வேளையும் கைகட்டி நின்று சேவித்து வந்தார். செல்வம் மிக்க கருப்பண்ண கவுண்டருக்குத் தனிக்குளமே இருந்தது அவர் செல்வச் சீமான் என்பதைத் தம் கவியில் காட்டுகிறார் இலட்சுமண பாரதி.

'சத்திரங் கட்டித் தடாகக் குளம்வெட்டி
சந்நதி கட்டித் தடம்படி யும்கட்டி
மெத்தக் கிணறொடு நந்த வனமிட்டு
வேலவர் முன்னர்முந் நேரமும் கைகட்டி
பத்தி பிடித்த சடைச்சியம் மாளைத்தன்
பாதத்திலே வைத்திடுநம் சிவாசலக் கர்த்தன்
பதமலர்க்கு அன்பன் கீரைநகர்க் காடைகுலன்
செல்வன் கருப்பண்ணன் குளப் பற்று'

என்பது சிவன்மலைக் குறவஞ்சியின் சீரிய அடிகளாகும்.

ஆதிகுலக் காணிப்பாடலில் ஆதிகுலச் செல்லப்ப கவுண்டரைக் காக்க வேண்டிக்கொள்ளும் கீரனூர்த் தெய்வங்களுள் ஒருவராகவே 'சிவன்மலைக் குமரேசன்' கூறப்படுகிறார்.

கீரனூர்ச் செப்பேட்டில் கையெழுத்திட்ட ஆறு கீரனூர்க் காணியாளர்களில் தேவேந்திர குலத்துக் காணி

யாளர் பெயர் சிவன்மலைக் கவுண்டர் என்று காணப்படு கிறது.

இன்றும் கீரனூர்க் காணியாளர் பலர் சிவன்மலை யோடு தொடர்புடைய பெயர்களை வைத்துக் கொள் கின்றனர், இதனால் பன்னெடுங்காலமாகச் சிவன் மலைக்கும், கீரனூருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு புலப்படும்.

1992 ஆம் ஆண்டு பரிதாபி ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் நாள் எழுதப்பட்ட ஆலய அறிக்கை ஒன்றில் 'பட்டாலிக் கீரனூர்' என்ற தொடர் காணப்படுகிறது. இன்றும் சிவன்மலை வழிபாட்டிலும் தேர்த்திருவிழா விலும் கீரனூர்க் காணியாளர்கட்குச் சிறப்பு மரியாதை அளிக்கப்படுகிறது.

# கீரனூர்

## இருப்பிடம்

வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான காங்கேய நாட்டின் 14 ஊர்களில் ஐந்தாம் ஊராகச் சிறப்புற்று விளங்குவது கீரனூர். காங்கேயம்—சென்னிமலை நெடுஞ்சாலையில் காங்கேயத்துக்கு 10 கி. மீ வடக்கில் உள்ள நால்ரோடு என்னும் இடத்திலிருந்து மேற்கே சுமார் 4 கி. மீ தொலைவில் கீரனூர் உள்ளது. இன்று சிற்றூராகக் காட்சியளிக்கும் கீரனூர் பழங்காலத்தில் மிகச் சிறப்பான பேரூராக விளங்கியுள்ளது.

## நான்கு யுகம் கண்ட ஊர்

கீரனூரின் பழமை கலியுகம் தாண்டிச் செல்கிறது. 'பழங்கீரனூர்' என்று ஒரு குறிப்புக் காணப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே இங்கு உயர்ந்த நாகரிகத்துடன் மக்கள் வாழ்ந்துள்ளனர். கீரனூர் ஊர் அமைந்துள்ள மேட்டுப் பகுதியே தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உரியது. 'கீரனூர்மேடு' என்றே இவ்வூர்ப் பகுதி மக்கள் வழங்குகின்றனர்.

நான்கு யுகமும் கண்டது இக்கீரனூர். திரேதா யுகத்தில் 'தீரனூர்' என்றும், கிரேதா யுகத்தில் 'மாரனூர்' என்றும், துவாபர யுகத்தில் 'சூரனூர்' என்றும், இக் கலியுகத்தில் 'கீரனூர்' என்றும் பெயர் வழங்கப்படுவதாகக் கூறுவர். இதன்மூலம் கீரனூரின் பழமை நன்கு வெளிப் படுகிறது.

## சங்கப் பெயர்

2000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்தில் மக்கள் 'கீரன்' என்று பெயர் வைத்துக்கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலமும், சங்க காலத்தில் வெட்டப்பட்ட பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டுக்கள் மூலமும் அறிகின்றோம்.

'நக்கீரன்' என்ற பெயரை நாம் அறிகின்றோம். புகழூர்ப் பழந்தமிழ்க் கல்வெட்டில்

'நல்லிய்ஊர் பிடந்தை மகன் கீரன்கொற்றன்'

'நல்லி ஊர் பிடன் குறும்மகள்
கீரன் ஓரி செய்பித்த பாளி'

என்ற பெயர்களைக் காணுகின்றோம்.

கொங்கு நாட்டுப் புகழூர் ஆறுநாட்டார் மலையில் வெட்டப்பட்டுள்ள பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டுக்களில் பெருங்கீரன், இளங்கீரன் முதலிய பெயர்களையும் காணுகிறோம்.

இவ்வாறு சங்க காலத்தில் வாழ்ந்த 'கீரன்' என்பார் பெயரால் இவ்வூர்க்குக் கீரனூர் என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

## இருளன் பெயர்

கரிகால் சோழன் இங்கு வனத்தை அழித்து ஊர் ஏற்படுத்திக் கோயில் கட்டிக் கொடை கொடுத்து மக்களைக் குடியேற்றியதாகச் சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது. வனத்தை அழித்து இங்கு வாழ்ந்த 'கீரன்'

என்ற இருளன் பெயரால் நகரம் ஏற்படுத்திக் கோட்டை கட்டிப் பேட்டை ஏற்படுத்திக் குளம் வெட்டியதாகப் பட்டயத்தில் காணுகிறோம். சேரன் ஏற்படுத்திய காரணத்தால் இவ்வூர் சேரனூர் ஆகிறது.

## காணியாளர் பெயர்

கீரனூர்க் காணியாளர் அறுவரில் கீரை குலத்தாரும் ஒருவர். கீரை குலம் என்பதே கீரன் என்ற குல முதல் வரால் ஏற்பட்ட பெயராக இருக்கலாம். கீரை குலம்—கீரகுலம் என்றும் அழைக்கப்படுவது இதனை உணர்த்தும். கீர குல முதல்வர் கீரன் என்பவர் பெயரால் இவ்வூருக்குக் கீரனூர் என்று பெயர் அமைந்திருக்கலாம்.

## கீரைநகர்

கீரனூர் மருவிச் சில ஆவணங்களில் 'கீரை' என்றும், 'கீரை நகர்' என்றும் குறிக்கப்படுகிறது. இலக்கியங்களில் 'கீரை நகர்' என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. நகர்—நகரம் என்பது வணிகர் தொடர்பான ஊராகும். வணிகர்களை நகரத்தார் என்று அழைக்கப்பெறுவதைக் காணலாம்.

பாண்டிய நாட்டில் இடைக்காலப் பாண்டியர் நாளில் பிரான்மலையில் பெரும் சந்தை கூடுவது வழக்கம். அவ்வாறு கூடும் பெரும் சந்தையில் தம் பொருள்களை விற்கும் கொங்கு நாட்டு எட்டு வணிக நகரங்கள் கூறப் படுகின்றன. அதில் நம் கீரனூரும் ஒன்று என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

சேரமான் பெருமாள் தான் ஏற்படுத்திய கீரனூரில் 'கவறை வலைஞ்சியரில் வரதசெட்டியைக் கஸ்தூரி

ரங்கப்ப செட்டி வைத்தான்' என்று சோழன் பூர்வ பட்டயம் குறிப்பிடுவது நோக்கத் தக்கது.

இன்றும் கீரனூர் ஆதீசுவரர் கோயிலோடு செட்டியார்கள் தொடர்பு கொண்டுள்ளமை இப்பண்டைய தொடர்பை விளக்கும்.

## புலவர்கள் போற்றிய ஊர்

தாம் பாடிய இலக்கியங்களிலும், தனிப் பாடல்களிலும், காணிப்பாடல்களிலும் கீரனூரைச் சிறப்பான அடைமொழிகளால் புலவர்கள் நன்கு வர்ணித்துள்ளனர். அதன் மூலம் கீரனூர்க் காணியாளர்கள் புலவர்களை ஆதரித்த திறமும், ஆதரவு பெற்ற தமிழ்ப் புலவர்கள் கீரனூரை மதித்த தன்மையும் பெறப்படுகிறது.

'செந்தமிழை ஆயும் கீரைநகர்'

'கனசமுயர் கீரனூர்'

'கொங்குலகில் மிக்கான கீரனூர்'

'பரிதிமதி சூழ்கின்ற கீரனூர்'

'சம்பர்மிகு கீரனூர்'

என்பன புலவர்கள் பொன்னுரையில் சில புகழ்பெற்ற அரிய தமிழ்த் தொடர்களாகும்.

## தொல்பொருள் சிறப்பு

கீரனூர் அருகில் உள்ள குறுப்பு நாட்டுக் கொடுமணல் கிராமம் தொல்பொருள் சிறப்பு வாய்ந்தது. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட வண்ணப் பாசிகளையும், ஆபரணக் கற்களையும் தம் நாட்டுக்கு வாங்கிச் செல்ல ரோம் நாட்டினர் கொடுமணல் வந்தனர்.

வண்ணக் கற்கள் கொடுமணல், கத்தாங்கண்ணி, சிவன்மலை, படியூர் ஆகிய இடங்களில் கிடைத்தன. இன்றும் கீரனூர் வட்டாரத்திலும் வண்ணக்கற்களும் வெண்படிகக் கற்களும் கிடைக்கின்றன. எனவே 'கொடு மணம் பட்ட வினைமாண் நன்கலம்' உருவாக்கும் அரிய மணியில் கீரனூர்க்கும் பங்கு உண்டு. கீரனூர் ஊர் அமைந்துள்ள மேட்டில் அகழ்வாராய்ச்சி செய்தால் கொடுமணல் போலவே அரிய தொல்பொருட்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

## உட்கிராமங்கள்

கீரனூர் முதலில் தோன்றிய தாய்க்கிராமம். கீரனூர் தாய்க் கிராமத்திற்குப் பல உட்கிராமங்கள் சேய்க்கிராமங்களாக உள்ளன. அவை கீரனூர் உட்பட 18 ஊர்களாகும். அவற்றுள் ஊர் என முடிவது ஒன்று. புரம் ஒன்று முடிவது ஒன்று. பாளையம் என முடிவன 5, உலவசு என முடிவன 11 ஆகும்.

அவை கீரனூர், காமாட்சிபுரம், செல்லப்பம்பாளையம் சென்னிமலை பாளையம், திட்டம்பாளையம், மொட்டரப் பாளையம், ராசிபாளையம்; அலுக்குத்திவலசு, எலந்தப் பழக் காட்டுவலசு, ஒக்கிலியங்காட்டுவலசு, கவலகாட்டு வலசு, சுள்ளிவலசு, பூமாண்டம்வலசு, மோளக்கவுண்டன் வலசு, ரங்கயன்வலசு, ரெட்டிவலசு, விராங்குட்டைவலசு, விஜயரங்கன்வலசு என்பனவாகும்.

# கீரனூர்க் காணியாளர்கள்

சிறப்புமிகு கீரனூர்க்குக் கொங்கு வேளாளர்களில் ஆறு குலத்தார் காணியாளர்களாக உள்ளனர். அவர்கள் ஆதி, அந்துவன், காடை, விலையன், தேவேந்திரன், கீரை ஆகிய குலத்தார் ஆவர். குலம், கூட்டம், கோத்திரம் எனப் பலவகையாகக் கொங்கு வேளாளர் குலங்கள் அழைக்கப்படும்.

காங்கேய நாட்டுப் பதினான்கு ஊர்களுக்கும் காணியாளர்களைத் தொகுத்துக் கூறும் காணிப்பாடலில் கீரனூர்க் காணியாளர்கள் தொகுத்துக் கூறப் பட்டுள்ளனர்.

'சம்பர்மிகு கீரனூர் தன்னில்வளர் ஆதியை
சவுபாக்கிய அந்துவ குலனை
தனிரிலகு காடை பெரும் விலையனை
தர்மமிகு தேவேந்திரனை நல் கீரையை'

என்று அப்பாடலில் காணப்படுகிறது.

மற்ற ஊர்க் காணியாளர்களைவிடக் கீரனூர்க் காணியாளர்கட்கு இப்பாடலில் சில அடைமொழிகள் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியது. வெறும் கூட்டப் பெயர்களை மட்டும் கூறாமல் தக்க அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ் அடைமொழிகள் வெறும் யாப்புக்காக எழுதப்பட்டவை அல்ல. அவ்வக் கூட்டங்களின் சிறப்புணர்ந்து கூறப்பட்ட உண்மை உரைகளாகும்.

வளர் ஆதி குலம்
சவுபாக்கிய அந்துவ குலம்
தளிரிலகு காடை குலம்
பெரும் விலைய குலம்
தர்மமிகு தேவேந்திர குலம்
நல் கீரை குலம்

என அடைமொழியுடன் கீரனூர் வேளாளர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். கீரனூர்ச் செப்பேட்டிலும் ஆதிகுலம், காடைகுலம், அந்துவ குலம், கீரை குலம், விலைய குலம், தேவந்திர குலம் ஆகிய குலங்கள கூறப்பட்டுள்ளன.

சில ஊர்களுக்கு ஒரு குலத்தாரும், சில ஊர்களுக்கு இரண்டு அல்லது மூன்று. நான்கு குலத்தாரும் காணியாளர் களாக உள்ளனர். கீரனூர்க்கு ஆறு காணியாளர்கள் இருப்பது இவ்வூரின் மக்கள பெருக்கத்தையும், வளத்தை யும், சிறப்பையும் காட்டுகிறது.

## ஆதி குலம்

சங்க காலம் தொடங்கிச் சிறப்புற்று வரும் கொங்கு வேளாளர் குலங்களில் ஆதிகுலம் ஒன்று. சங்க இலக்கியங் களில் ஆதி என்ற பெயர் காணப்படுகிறது. ஆதி என்பவரைக் குல முதல்வராகக் கொண்ட குலம் ஆதி குலம் எனப்பட்டது.

ஆதி என்றால் தொன்மை, பழமை, முதன்மை என்று பொருள்படும். ஆதி என்பது இறைவனுக்கும் பெயர். திருவள்ளுவர் ஆதிபகவன் என்றார். கொங்கு நாட்டு நீதி இலக்கியமான 'கல்வி ஒழுக்கம்' என்னும் ஏடு

'அஞ்சு வயதில் ஆதியை ஓது
ஆதியை ஓத அறிவுண் டாமே'

என்று கூறுகிறது. சமண சமயத்தில் முதல் தீர்த்தங்கரர் 'ஆதி' எனப்படுவார்.

ஆதி குலத்தார் ஆறுநாட்டில் 'ஆதியூர்' என்ற ஊரை ஏற்படுத்தினர். இன்றும் அவ்வூர் அப்பெயரிலேயே வழங்கப்படுகிறது. கீரனூர்ச் சிவபெருமான் 'ஆதீசுவரன்' என்று வழங்கப்படுகிறார். இராமனால் வணங்கப்பட்டது இராமேசுவரம் வாலி வணங்கியது வாலீசுவரம், அது போல் ஆதி குலத்தார் வழிபட்டது, அல்லது திருப்பணி செய்தது 'ஆதீசுவரம்' என்று பெயர் பெற்றிருக்கலாம்.

கீரனூர் சார்பாகப் பிற ஊர்ப் பட்டயங்களில் கையெழுத்திடும்போது பெரும்பாலும் ஆதி குலத்தாரே சென்று கையொப்பமிட்டுள்ளதைக் கொங்கு நாட்டு ஆவணங்களில் காண முடிகிறது. கீரனூர் ஆதிகுலம் சின்னத்தம்பிக் கவுண்டர் என்பது அப்பட்டயம் ஒன்றில் காணப்படும் வாசகமாகும்.

ஆதி குலத்தாரின் ஊர்கள் நாகம்பள்ளி, கீரனூர் வெள்ளைக்கிணறு, அதியூர், லக்காபுரம் போன்ற பல ஊர்களாகும். கீரனூரிலிருந்தும், நாகம்பள்ளியிலிருந்தும் ஆதி குலத்தார் பல்கிப் பெருகிப்பவானி, கோபி, அவினாசி, கோவை வட்டாரங்களில் அதிக எண்ணிக்கை யில் வாழ்ந்துவருகிறார்கள். ஆதி குலத்தாரின் முதன்மைக் காணிகளில் கீரனூரும், நாகம்பள்ளியும் முக்கியமான தாகும்.

பெரும்பாலும் ஆதி அந்துவன் குலத்தார். குலம்வாழும் ஊர்களில் காணி பெற்று அவர்களுடன் இணைந்து சமய, சமூகக் காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நாகம் பள்ளியில் ஆதிகுலமும், அந்துவன் குலமும் இணைந்து

செல்லாண்டியம்மன், அணைக் கருப்பணசுவாமி திருக் கோயில்களைச் சிறப்புடன் நிர்வாகம் செய்து வரு கின்றனர். வெள்ளைக் கிணறு ஊரை ஏற்படுத்தியவர்கள் ஆதி குலத்தாரேயாவர். ஆதி குலத்தையும் அந்துவன் குலத்தையும் இரட்டைக் குலம் என்று கூறுவர். ஆதி குலத்தார் செல்லாண்டியம்மன். கருப்பண சுவாமி, பத்திரகாளியம்மன், அத்தனூர் அம்மன், நாட்டுராயன் ஆகிய தெய்வங்களைக் கொங்கு நாடெங்கும் வணங்கி வருகின்றனர்.

கீரனூரில் செல்லப்பன் என்ற ஆதிகுலப் பெரியவர் வாழ்ந்துவந்தார். அவர் மிகவும் தெய்வ பக்தியுடையவர், புலவர்களை நன்கு ஆதரித்தவர். குல குருக்களிடமும் அளவிலா ஈடுபாடு கொண்டு ஆதரவு செலுத்திவந்தவர். சிவன்மலை முருகன் மீதும் அளவற்ற ஈடுபாடு கொண்ட வர். அவர் மகன் தேவண கவுண்டர். அவரும் தந்தை போலவே எல்லாக் குணங்களிலும் சிறப்புற்று விளங்கினார்.

புலவர் ஒருவர் அவ்விருவர் மீதும் அழகிய பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். ஏட்டுச் சுவடியிலிருந்து அப் பாடல் முதல் முறையாக இங்கு வெளியிடப்படுகிறது.

'கங்கைமதி புனைகின்ற ஆதீசர் தன்னை,
கவுரிஅகி லாண்ட உமையை,
கரியமால் வீரநா ராயண முராரியை,
கமலவா கனச்செல்வியை

சிங்கவா கினியான செல்லாண்டி யப்மனை,
சிவன்மலைக் குமரேசனை,
சிந்துர முகக்கடவுள் மற்றுமுள தேவர்தம்
சீரடி வழுத்தல் செய்வசம்;

கொங்குவகில் மிக்கான கீரனூர் ஆதிகுலக்
குருசிலே தனுமாரனே
குருராயன் மலைய கொடுமுடிப் பண்டிதர்
கொடுத்தவெண் ணீறுபுனையும்
துங்கவேள் தியமுயர் ஆதிசெல் லப்பனருள
தோன்றலைச் சாந்தகுணனை
தோறாத மணியத் தேவண பூபதியைச்
சுகம்பெறக் காக்கவென்றே!'

என்பது ஆதிகுலக் கீரனூர் தேவண கவுண்டர்மீது பாடப்பட்ட செந்தமிழ்ப் பாடலாகும். இதன் மூலம் கீரனூர் ஆதிகுலத்தார் தெய்வபக்தி, குருபக்தி, குணம், வெற்றி, பெருமை, மேன்மை ஆகியன பெறப்படுகின்றன. ஆதி குலத்தார் தங்கள் மக்களுக்கு ஆதீசுவரன் என்று பெயர் வைத்துவருவது சிறப்புமிக்கதாகும். தேவண கவுண்டர் மணியகாரராக விளங்கியுள்ளமை இப்பாடலால் தெரிகிறது.

## அந்துவன்

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கி வந்த பழம் பெயர்களில் 'அந்துவன்' என்பதொன்றாகும். அரசர்களும், வேளிர்குலத் தலைவர்களும், புலவர்களும் பலர் அந்துவன் என்ற சிறப்புப் பெயர் பெற்று விளங்கினர். 'அந்துவன்' என்ற பெயர் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் பழந்தமிழ்க் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது.

'அந்துவன் கொடுபித்தவன்'

என்ற தொடரைத் திருப்பரங்குன்றக் கல்வெட்டில் காணுகிறோம். அதே திருப்பரங்குன்று 'அந்துவன் பாடிய சந்துசெழு நெடுவரை' என்று போற்றிப் புகழப்படுகிறது.

சங்ககாலப் புலவர் ஒருவர் 'நல்லந்துவனார்' எனப் பட்டார். கீரனூர் அருகில் கொடுமணலில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார் நிகழ்த்திய அகழ்வராய்ச்சியில் 'அந்துவன்' என்ற பெயர் பழந்தமிழில் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளமை சிறப்புக்குரியதாகும், அதனால் 2000 ஆண்டுகட்கு முன்பே அவர்கள் இப் பகுதியில் வாழ்ந்தமை புலப்படும்.

அந்துவன் என்ற குல முதல்வரால் ஏற்பட்டது அந்துவன் குலம் ஆகும். நாகம்பள்ளி, கீரனூர், ஆரியூர், மோடமங்கலம், ராசியூர், பாலைமேடு, தூரம்பாடி, கோதையூர், அந்தியூர், வக்காபுரம், தோட்டாணி, செவியூர், வாய்ப்பாடி, முடுதுறை, திருவாச்சி, கொடையூர், ஊஞ்சலூர், தெக்கலூர், பூந்துறை, சேவூர், குன்னத்தூர் போன்ற ஊர்கள் அந்துவன் குலத்தாரின் பழம்பெரும் காணியூர்கள். இதைத் தொகுத்து ஒரு பாடலில் பாடியுள்ளனர்.

'சீருலவு நாகநகர் கீரனூர் ஆதியூர்
செப்பரிய மோடமங்கை
திகழ்ராசி யூர்பாலை மேடுதூ ரம்பாடி
சித்திரவீ திக்கோதையூர்]

ஏருலவு வடகரை நன்னாட்டில் அந்தியூர்
இனியலக் காபுரமுடன்
எழில்பரவு தோட்டாணி மேவுசெவி யூருடன்
இனிதான வாய்ப்பாடியும்

காருலவு முடுதுறை அன்னதரு திருவாச்சி
கனககொடை யூருமிகவும்
காவேரி சூழுமேல் அரையநன் னாட்டினில்
கதிபெருகும் ஊஞ்சலூரும்

ஆரமணி மேடைதிகழ் தெக்கலூர் பூந்துறைசை
அதிகசே வூருகுன்றை
அந்துவ குலத்தில்வரு மோழைசெல் லப்பனே
அடையலர்கள் பணிசிங்கமே'

இப்பாடலில் மோழைசெல்லப்ப கவுண்டர் என்று அந்துவ குலத் தலைவர் புகழப்படுகிறார். பெரும்பாலும் இதே ஊர்களைத் தொகுத்துக் கூறும் வேறொரு காணிப் பாடலும் அந்துவன் குலத்துக்கு உண்டு. அப்பாடல்,

'நன்னிலம் புகழ்கின்ற நாகம்பள்ளி கீரனூர்
நற்பாலை மேடையதுவும்
நளினமுள லக்கா புரத்துடன் திருவாச்சி
பெருகுந்திரு ஆதியூரும்

சென்னெல்வயல் சூழ்கின்ற மோடமங் கலமதுவும்
செழித்ததா ரம்பாடியும்
செயமருவு அந்தியூர்ப் பதியுடன் மிக்கவாள்
செப்பமுள காணிபெற்றாய்

சொன்னமொழி தவறாத அந்துவ குலத்தில்வரு
சுகசரண கெம்பீரனே
சுந்தர மடந்தையர்கள் விரதமத பேகனே
சொர்ப்பனுட மகமேருவே

தன்மையது வாகவே நன்புலவன் றெண்ணுநீ
தாபரித் திடும்பவுளித்
தாட்டீக சென்னியருள் செல்லமகி பாலனே
தாடாழர் பரிகுலனே!'

என்பதாகும். இப்பாடலில் அந்துவகுலத்தார் சொன்ன மொழி தவறாதவர் என்று கூறப்படுகிறது. இங்கு புகழப்

படுபவர் சென்னிமலைக் கவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டர் என்ற அந்துவ குலத் தலைவர்.

பரிக்கு நகுலன் என்று மேல்பாடலில் புகழப்பட்ட கீரனூர்க் காணியாளர் அந்துவ குலத்தார்களின் குதிரை ஏற்றம் பற்றிய அழகிய பாடல் ஒன்றும் கிடைத்துள்ளது. நாகம்பள்ளியுடன் தொடர்புடைய கீரனூரில் வாழ்ந்த அந்துவகுலப்பெத்தான் செல்லப்ப கவுண்டரை அப்பாடல் கீழ்வருமாறு புகழுகிறது. இப்பாடல் தலைப்பில் 'நீலவேணி விருத்தம்' என்று காணப்படுகிறது.

வண்டுற்ற சோலைதிகழ் நாகயம் பதியினில்
வளமிட்டு வாளியிட்டு
வல்லயத் தருகிட்டு சவரிதுப் பாச்சியில்
வங்களப் பச்சையிட்டு

அண்டத்தில் மணிகட்டி மின்சல்லி பின்சல்லி
அணிசல்லி ரேக்குமிட்டு
அழகுபொன் முகமிட்டு வாகார மிட்டு
அதிகவெகு சுட்டிகட்டி

கண்டத்தில் விருதிட்டு முகத்துக்கண் ணாடியில்
காலத்தின் நீலிமெச்சக்
கருதிட்டு துட்டரை எதிரிட்டு வெட்டியே
கடியபரி முனைபெற்றவன்

செண்டுற்ற புகழ்பெற்ற கீரைநகர்ப் பெற்றான்
செல்லப்ப மகிபாலனே
தென்வஞ்சி நகராளும் மங்கைநகர் அதிபனே
செந்தமிழ்க் குற்றதுணையே!

அந்துவ குலத்தார் செந்தமிழ்க்கு உற்ற துணையாக இருந்த தன்மை இப்பாடலால் புலப்படுகிறது. குதிரைப்

போரில் அவர்கள் பெற்ற வெற்றி இங்கு சிறப்பிக்கப் படுகிறது.

தூரம்பாடிக் காணியாளர்களைத் தொகுத்துச் கூறும் பாடலில்,

தூரைவேட் டுவன்ஆந்தை சொல்லுநிலை அந்துவன்
வீரையுள மயிலன் மெய்ச்செட்டி—நீரை நுதல்
தீட்டு முதலய்ந்து செழித்திடு தென்கரை
நாட்டிலுயர் தூரை நகர்

என்று அந்துவ குலம் 'சொல்லுநிலை அந்துவன்' என்று புகழப்படுகிறது.

மற்றொரு பாடலில் ஆந்தைகுல நாச்சியப்ப வுண்டர், மயிலகுல வஞ்சிராயக் கவுண்டர் ஆகியோருடன் அந்துவகுலச் சென்னிமலைக் கவுண்டர் மகன் செல்லய கவுண்டர் மிகவும் புகழப்படுகின்றார். கர்னனைப் போல் கொடை கொடுக்கக்கூடியவர் அந்துவகுலச் செல்லய கவுண்டர். அன்னதானம் மிகுதியாகச் செய்து அன்ன தானச் செல்லய கவுண்டர் என்றே அவர் புகழப்பட்டார்.

'கர்ன்னா உதாரனே அந்துவ குலத்தில்வரு
கணயோக சென்னிமால்தன்
கண மணிப் புதல்வனே அனதான செல்லயன்
காக்குகைக் கர்னன் அல்லால்'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

கீரனூர் அந்துவ குலத்தில் சென்னிமலைக் கவுண்டரைக் கீரனூர்த் தெய்வங்கள் எல்லாம் காத்து நிற்கின்றன. அதனால் அவர் செல்வச் சிறப்புடன்

மக்களுடன் பதினாறு பேறும் பெற்று நீடூழிக்காலம் வாழ்க என வாழ்த்துகின்றார் புலவர். இப்பாடலில் கீரனூர்த் தெய்வங்கள் அனைத்தும் சுட்டப்படுகின்றன.

சீர்கொண்ட வடிவுற்ற ஆதீச லிங்கரும்
தேவிஅகி லாண்டவல்லி
செந்தில்வடி வேல்முருகர் கந்தவேள் குமரனே
தெண்டாயுதக் கந்தனே

கார்கொண்ட கருணைபுரி செல்லாண்டி யம்மையும்
கருப்பண்ண சுவாமியும்
கரியகுழல் பேச்சியும் துக்காச்சி யம்மனும்
கருணைவிண் ணப்பம்செய்து

பேர்கொண்ட பிரபலன் கீரைநகர் அதிபனே
பெருமைபெறு அந்துவகுலனே
பிரபலத் ததிபனே சென்னிமலை பூபனே
பிரசண்ட மகமேருவே

வார்கொண்ட ரதிமோகன் சென்னிமலை பூபனும்
மகராச யோகமல்கு
மக்கள்பதி னாறுடன் நீடூழிக் காலமும்
வாழ்ந்திடக் காக்கநன்றே!

அந்துவ குலத்தில் பெத்தாக் கவுண்டர் என்பவர் வாழ்ந்துவந்தார். நன்கு தமிழ்ப் படித்த அவர் தேவாரம் பாடிய மூவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் பாடலில் மிகவும் அன்புகொண்டு சுந்தரர் பாடலுக்கு அடிமை ஆனார். இதனை வாலசுந்தரக் கவிராயர் கொங்கு மண்டல சதகம் மிகவும் புகழுகிறது.

மேல் பாடல் ஒன்றில்வரும் பெத்தான் செல்லப்ப கவுண்டரின் தந்தை இப் பெத்தாக் கவுண்டர்,

> அற்றது கூடவும் சுந்தரர் பாடற்கு அடிமையென்றே
> பெற்றவன் பெற்றவன் பெற்றவன் காண்பிர வேசிதன்னை
> முத்தமிழ் வாணற்கு வேளூர் அப்பர்முன் பாய்க்கொடுத்து
> வைத்ததும் அந்துவன் பெத்தான் வளர்கொங்கு மண்டலமே!

என்பது அப்பாடலாகும்.

கம்பநாத சுவாமி பாடிய கொங்கு மண்டல சதகத்தில் அந்துவ குலத்தார் 'அவ்வைக்கு அடிமை' என்று கூறிப்புகழ் பெற்றனர் என்று கூறப்படுகிறது.

மேற்கண்ட பாடல்களில் மோழை செல்லப்ப கவுண்டர், சென்னிமலைக் கவுண்டர், செல்லய கவுண்டர், பெத்தாக் கவுண்டர் போன்ற அந்துவ குலப் பெருமக்கள் புகழ்ந்து கூறப்பட்டுள்ளனர். அவர்களின் காணியூர் களின் சிறப்பு, பக்தி, தமிழ்ப்பற்று, கொடை முதலிய பெருமைகள் ஆகியவை மேற்கண்ட பாடல்களில் வெளிப்படுகின்றன.

கீரனூர் அந்துவன் குலத்தார் கீரனூர்க் கிராமம் மொட்டரப்பாளையத்தின் தென்கோடியில் அமைந் துள்ள தங்கள் குலக் கன்னியர்களான தேவாத்தாள், செலம்பாத்தாள், வீராத்தாள் ஆகியவர்களை வீரமாத்தி யம்மனாக வழிபட்டு வருகின்றனர். அங்கு ஆடிப் பெருக்கின்பின் வரும் புதன் கிழமை பொங்கல் நடைபெறும். திங்கள், வெள்ளி சிறப்புப் பூசை நடைபெறுகிறது இக் கோயில் வரலாற்றை டி. எம். பாட்டைய கவுண்டர் அவர்கள் எழுதியுள்ளார்

**காடை குலம்**

காடன், காடர், காடை, காடான், காடவர் எனப் பலவாறு ஆய்வாளர்களால் அழைக்கப்பெறும் இக்குலம் கொங்கு வேளாளர் குலத்தில் பெருகி வாழும் குலங்களில் ஒன்றாகும். காடன் என்பாரைக் குல முதல்வராகக் கொண்டு பெருகிய குலம் காட குலம் என்றாகிப் பின்னர் காடை குலம் என்றாகியிருக்கலாம். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் செங்கம் நடுகற்களில்கூட கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் **சாகாடச் சிற்றன்** என்பான் பெயர் காணப்படுகிறது. ஈரோடு கலைமகளில் உள்ள ஒன்பதாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் **காடன்** என்ற பெயர் பயின்றுவருகிறது. திருப்பூர் க. பழனிசாமிப் புலவர் காடை குலத்தைக் காடவர் குலம் என்றே அழைப்பார். டி. எம் காளியப்பா அவர்கள் காடவருக்கும் காடை குலத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்பார். பேராசிரியர் கா. அரங்கசாமி அவர்கள் காடகுலம் காடு திருத்தி நாடாக்கியதால் பெற்ற பெயர் என்பார்.

ஆனால் இலக்கிய வழக்கெங்கணும் காடைகுலம் என்று மட்டுமே அழைக்கப்பெறும் சிறப்புடையது இக்குலம்.

**'காருலவும் இனிதான காடை குலர்'**
**'காடை குல மகராசர்'**
**'போதமிகும் காடை குலம்'**
**'வல்லோனாம் காடைகுல வண்மையுளான்'**
**'காடைகுல மேரு'**
**'அன்புபெறும் காடைகுலம்'**

என்ற இலக்கியத் தொடர்களால் இதனை உணரலாம். அவர்கள் 'தாரணி மதிக்கும் தண்டிகைத் துரை', சொல்

லிரண்டு உரையாதவர்' 'கற்றவர்க்கு உற்ற துணை' என்று புகழப்பட்டனர்.

காடை குலத்திற்கு 3 காணிப்பாடல்கள் கிடைத்துள்ளன. அப்பாடல்களில் முதற்பாடல்,

கன்னலுயர் பூந்துறை பெருந்தொழு பவுத்திரம்
கருணைபெறும் ஆத்தூருடன்
கனகமுயர் வெள்ளியணை ஆதியூர் நன்னகர்க்
காரணர் உறைந்தபதியும்

இன்னிலத் தினியமுளை யாம்பூண்டி புல்லூரு
இயல்வாழ வந்திபுன்னம்
இளம்பிள்ளை பட்டிலூர் சடையகுளம் மருதுறையும்
ஏழூரு தோழூருடன்

சென்னெல்செறி கழனியூர் கீரனூர் ஆண்மைமிகு
திறமையுள கங்குப்பட்டி
செல்வமிகு வள்ளிநகர்க் காடைகுல வள்ளல்கள்
தீர்க்கர சாட்சிபுரியும்

மன்னர்பணி யும்பெரிய னாயகி மனோன்மணியின்
மலரடியை மறவாதவர்
வன்னிபூ பதிஉதவு செல்லயன் காடைகுல
மகராசர் காணியிதுவே!

இரண்டாம் பாடல்

கன்னலுயர் வள்ளிநகர் புகழ்பெறும் பார்ப்பதி
கருணைபெறும் ஆத்தூருடன்
கனகமுயர் கீரனூர் ஆதியூர் நன்னகர்
காரணர் உறைந்தபதியும்

நன்னர்சேர் பூந்துறை பெருந்துளு பவுத்திரம்
நன்மைசெறி வெள்ளியணையும்
நலமான கழனியூர் ஏழுரு தோழுரு
நாட்டிலுயர் கங்குப்பட்டி

இன்னிலத் திலகுமுளை யாம்பூண்டி புல்லூர்
இயல்வாழ வந்திபுன்னம்
இளம்பிள்ளை பட்டிலூர் சடையகுளம் மருதுறை
இவைபதியில் அரசுபுரியும்

பொன்னின்மே ழிக்கதிபர் செங்குவளை அணிமார்பர்
பூமிபா லகரானவர்
போதமிகு காடைகுல மகராசர் வாழ்கின்ற
புகழ்பெருகு காணியிவையே!

மூன்றாம் பாடல்

கன்னல்செறி தூசியூர் புல்லூர் தோழூர்
கனமான மாவிரட்டி
கதித்திடும் சேமந்தூர் வெண்ணந்தூர் மங்கலம்
கனிவுபெறு தேவர்தொகையும்

மன்னவன் புகழ்மோட மங்கலம் மிவையுடன்
வளமைபெறும் பூந்துறையுமாம்
வண்மைசேர் காகம்ஆ லாம்பாடி நசையனூர்
வளர்கூடக் கரையுமாம்

சென்னெல்செறி புன்னம் பெருந்துறை வேம்பத்தி
சிறுநல் லூர்பட்டிலூர்
சியமான இளம்பிள்ளை கீரனூர் பட்டாலி
திறமான வள்ளிநகரும்

அன்னதரு வான பார்ப்பதி நகருக்கு
அதிபன்என வந்தசுமுகன்
அரசர்மனம் மகிழவரும் காடைகுல மேருவென
அவனிதனில் வருகாணியே!

சில காணிப்பாடல்கள் ஓர் ஊருக்குள்ள காணியாளர் பெயர்களைத் தொகுத்துக் கூறும். அவ்வகையில் இளம் பிள்ளைக் காணிப்பாடல் காடை குலத்தாரின் தொடர்பைக் கூறுகிறது. அப்பாடல்'

செல்லாண்டி அம்மனுடன் சின்னம்மனைச் சேவிக்கும்
வல்லோனாம் காடைகுல வண்மையுளான்—நல்லோர்காண்
மாதவரும் சூழ்வானஞ் செட்டி ஆன்பொருநை
ஓதும் இளம்பிள்ளை ஊர்

என்பதாகும்.

ஒருமுறை பூந்துறை நாட்டு எல்லையை மேல்கரை அரையநாட்டு ஊரார் தங்களுடையது என்று கவர்ந்து கொண்டனர். அவ்வெல்லைப் பகுதி காகம் கிராமத்துக்குச் சொந்தமானது. அப்போது மதுரை வீரப்ப நாயக்கர் என்பவர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். காகத்தில் உள்ள வேட்டுவப் பெருமக்கள் பெரியணன்' செல்லயன், விருமன் ஆகிய மூவருடன் சேர்ந்து பூந்துறைக் காடை குலத்தார் பூந்துறை எல்லையை மீட்க முற்பட்டனர். காகத்து மேட்டில் வேங்கஞ்சுனை சூழ்ந்த கருங்கரடு எல்லை பூந்துறைக்கு உரியது என்று தாராபுரம் அகத்தீசர் சன்னதியில் மழு எடுத்து மீட்டவர் காடை குலத்தைச் சேர்ந்தவர். காடைகுலச் செல்லப்பகவுண்டர் தம்பி கனக செல்லக் கவுண்டர் ஆவார்.

இப்பணியில் காடை குலத்தாருடன் காகத்து வேட்டுவகுலப் பெருமக்களும் இணைந்து பணியாற்றியது குறிப்பிடத் தக்கதாகும்.

காடை குலத்தாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க அப்பணியை ஓலைச்சுவடியில் கிடைத்த பாடல் கட்டிக் காட்டுகிறது.

சிலைமதன ரூபவீ ரப்பகா யக்கரசு
செங்கோல் செலுத்துநாளில்
திசையான காகத்து வேட்டுவப் பெரியணன்
செல்லப்பன் விருமனுடனே

கலையாரு மேட்டுறை வேங்கஞ் சுனைசூழ்க்
கருங்கரடு உள்ளாகவே
காவேரி வானியும் நொய்யல்சூழ் மேல்கரைப்
பூந்துறைசை நாட்டெல்லையை

தலையநல் லூரார் தங்களு தென்றெல்லைச்
சண்டைக ளாகவேதான்
தம்பிகனக செல்லன் தாராபுர அகத்தீசர்
சன்னதியில் மழுஎடுத்தனன்

மலையாள கலியுகம் மூவாயி ரம்தனில்
வந்தபவ வையாசியில்
மங்கலப் பரணியில் வென்றசெல் லப்பனே
வன்மையுள காடைகுலனே!

கனக செல்லன் என்னும் காடைகுல வள்ளல் சோழமன்னன் முன் அச்சோழனே மகிழுமாறு வரும் புலவர்களை அழைத்து விருந்து பசரித்தான். இச்செயலை

வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகப்பாடல் மிகவும் புகழ்ந்து பேசுகிறது.

ஆடையும் முத்தும் அணிமார்ப சோழன் அகளங்கன்முன்
மேடை புகழ்ந்து விரும்புல வோரை விழைந்தழைத்துக்
காடை குலாதிபன் பூந்துறை நாடன் கனகசெல்லன்
மாடையும் தெய்வ அமுதளித் தான்கொங்கு மண்டலமே

என்பது கனகசெல்லன் புகழ்பாடும் கொங்கு மண்டல சதகப்பாடலாகும்.

மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் மூவேந்தர் எல்லை பிரிக்கும்போது உதவிகள் பல செய்து அரசர்களிடம் சிறப்புப் பெற்றவர்கள் காடை குலத்தினர்.

சோழன்முன் னாகவரும் சேரனும் பாண்டியன்
சோடுகரை பிரிக்கும்நாளில்
சொன்னமுத லிக்குமுன் அன்னக்கொடி கட்டியே
சோறிட்டு நிலமைபெற்று
வேழமுன் மணிபரவு பூச்சக்ர வாளமது
வெங்கல நன்னாட்டினில்
வெண்ணைமலை பவுதியில் தோமூர் இளம்பிள்ளை
மேன்மைபெறு பூந்துறைசையில்
வாழரசன் முன்னின்று நானரசன் நீயென்று
வாதிட்டு நின்றசமுகம்
வரிசைபெறு தண்டியில் சுருட்டிதீ வட்டியும்
மவுலிநீர் பவித்ரமதும்
ஆளித மகராயர் பூந்துறைசை நாட்டிலே
அதிகபேர் பெற்று வந்தாய்
அன்புபெறு காடைகுல செல்வவா ரணவாசி
அடையலர் பணிசிங்கமே!

புலவர்கள் காடைகுலத்தில் மேருமலையென விளங்கும் கீரனூர்ப் பழனி மகராயரிடம் பொன்னும் பொருளும் பெற்று அவரை வாழ்த்தினர். தாம் வேண்டும் பொருள்களை வெளிப்படையாகக் கேட்டுப் பெற்றனர். சொல் இரண்டு உரையாத ஒரு சொல் வாசகனான காடைகுலப் பழனியப்ப கவுண்டர் புலவர்கட்கு அவர்கள் விரும்பிய பொருளைக் கொடுத்தார். புலவர்கள் அவரை வாழ்த்தினர். அவ்வாறு வாழ்த்திய பாடல்களில் ஒன்று.

காமனருள் பாலகன் முத்துமக றாய்நிட
    கனமணிகள் தானசுதனே
காடைகுல மேருவென அனதான வீடனே
    கற்றவர்க்கு உற்றதுணையே

ஆமனவை எந்தனிட தமிழ்மாலை கேட்டுநீ
    ஆடையா பரணம் எல்லாம்
அட்டிசொல் லாமலே ஒருபொதி கம்புடன்
    அஞ்சுபொன் அருள்புரிகுவாய்

ராமனஞ் சகோதரி எழுவரம்மை செல்லாண்டி
    லட்சுமா தேவியுமையும்
நானிலந் தனில்உள்ள தேவாதி தேவரும்
    நாள்தோ றுனைக்காப்பதாய்

சோமனே இளம்பிள்ளை நகர்மேவு மருகனே
    தூயனே கனயோகனே
சொல்லுரண் டுரையாத பழனிமக ராயனே
    துரகதப் பரிநகுலனே'

என்பதாகும்.

காடைகுலத்து நண்ணாவுடையார் என்பவருக்கு மூவேந்தர் முடிசூட்டியதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

காடை, சாகாடை என்ற வழக்கும் பண்டுதொட்டே வருகிறது. பெருந்துறைக் காடையைச் சாகாடை என ஒரு பட்டயம் கூறுகிறது. கொங்கு மண்டலத்தில் 'சாகாடன்' என்ற தலைவன் வாழ்ந்ததாகச் செங்கம் வட்டெழுத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.

காவிரிக்குக் கிழக்கே–மேற்கே வாழ்பவர்களைக் கீழைக்காடை, மேலைக்காடை என்றும் வழங்கியமைக்குக் கல்வெட்டுச் சான்று உண்டு. காடை குலத்தினர் மூவேந்தர் துணையோடு கொங்கில் பெரும் அதிகாரம் செலுத்தினர். மூவேந்தருக்காகப் போரிட்டனர். கீரனூர், பூந்துறை, கோனூர், ஆத்தூர், பவுத்திரம், பெருந்துறை, பில்லூர் முதலிய ஊர்களை முதன்மையாக வைத்துக் கீரனூர்க்காடை, பூந்துறைக் காடை என அழைத்தாலும் எல்லாக் காடையும் ஒன்றேயாகும்.

காடை குலத்தினர் 'அன்னக்கொடி கட்டி' புலவர்க்கும் இரவலர்க்கும் உணவளித்தனர். தங்கப் பொன் தண்டிகை பெற்று அரசு புரிந்தனர், இலக்கியம் பல படைத்தவர்கள் காடைகுலத்தினர். எண்ணற்ற செப்பேடுகள், கல்வெட்டுக்களில் காடை குலத்தினர் இடம் பெற்றவர்கள்.

**விலையகுலம்**

'பெரும் விலைய குலம்'
'தண்டமிழ்க்கு விலைய குலம்'
'மருவிவரும் விலையகுலம்'

என்றெல்லாம் பல்வேறு இலக்கிய ஏடுகளால் புகழப் பட்டது விலைய குலம் விலையன் என்னும் குல முதல்வனால் பல்கிப் பரவிக் கொங்கில் புகழ்பெற்று வாழும் குலம் விலைய குலம். ஆவணங்களில் விலையன் குலம் என்றும், விலையர் குலம் என்றும், தலையநல்லூர்க் கல்வெட்டில் வெலையகோத்திரம் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

விலையகுலத்தினர் மேல்கரை அரைய நாட்டுக் தலை நகரான தலையநல்லூரை முதற்காணியாகக் கொண்ட வர்கள். அங்கு அவர்கள் திருப்பணியைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவர்களால் தலையநல்லூர் பெரும்புகழ் கொண்டது.

விலைய குலத்தினர் காணிப்பாடல் மூலம் கொங்கு நாடு முழுவதும் அவர்கள் பரவியுள்ளனர் என்பது தெரிகிறது.

விறைய குலத்தினர் தலையநல்லூர் (சிவகிரி), மின்னாம்பள்ளி, ஆறைநகர் (ஆத்தூர்), மண்மங்கை, கீரனூர், ஆரியூர், குமரமங்கலம், வடுகநகர், பஞ்சமாதேவி, சென்னிமலை, காக்கைவாடி, முட்டுக்கோட்டை, சேலம், சிராமணி, தாழை, இடைப்பாடி, தாராபுரம், கொன்னை யார், கொளமங்கை, சாத்தனூர், துத்திக்குளம், பொங்கலூர், எழுகரை நாடு ஆகிய இடங்களைக் காணியாகக் கொண்டவர்கள். இதனைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

'பெருகுபுக ழேகொண்ட தலைசையின் னாம்பள்ளி
பேர்பெற்ற ஆறைநகரும்
பெருமைசெறி மண்மங்கை கீரனூர் ஆரியூர்
பின்குமர மங்கலமதும்

திருவுலவு வடுகநகர் பஞ்சமா தேவியும்
சென்னிகிரி காக்கைவாடி
தென்முட்டு கோட்டைமிகு சேலம் சிராமணி
சேர்தாழை இடைதாரையும்

தருவுலவு கொன்னையார் கௌமங்கை சாத்தனூர்
தருமமிகு துத்திக்குளம்
தண்பொங்க லூருடன் எழுகரைநன் னாடுமே
தமதுடைய காணிபெற்றாய்

மருவிவரும் விலையகுல பெரிச்சிபூ பாலனே
மைந்தன்ஐ யைந்தாருவே
மருப்புயா சலன்ஆன பெரிச்சிபூ பாலனே
மண்டலம் பிறைக்காதியே'

கொங்கு வேளாளர்கள் தம் காணியை நன்கு மதிப்பவர்கள். காணியைத் தம் உயிருக்கும் மேலாகப் போற்றுபவர்கள், காணியூரின் எல்லைகளைக் காக்கும் முயற்சியில் பலர் பெரும் போரிட்டுள்ளனர். அதில் பலர் வீரமரணம் எய்தியுள்ளனர். நடுவர்கள் கூடியுள்ள அவையில் மழுவெடுத்தல் போன்ற செயற்கரிய செயல்களால் தம் காணி உரிமையை நிலைநாட்டியுள்ளனர், அவ்வரிசையில் விலையகுலப் பெருமக்கள் சேர்ந்துள்ளனர்.

விலைய குலத்தில் திருவாளி நல்லன் என்னும் தலைவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தம் காணி

உரிமைக்காக மூவேந்தர் சபையில் தன் தலையை அரிந்து கொண்டார். அதனால் பெரும்புகழ் பெற்றார் என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

> கலைதெரி மூவர சர்முன்னே கொங்கினில் காணிக்குத்தன்
> தலையை அரிந்து புவியினில் வாழ்ந்தவன் தண்டமிழ்க்கு
> விலைய குலாதிபன் திருவாளி நல்லவன் வேடர்தந்த
> மலைதெரி வாசம் புகழ்தரு வோன்கொங்கு மண்டலமே!

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.

## தேவேந்திர குலம்

காணிப்பாடல்களிலும், காங்கேய நாட்டுப் பாடல் களிலும், ஆவணங்களிலும் இக்குலம் 'தேவேந்திர குலம்' என்றே குறிக்கப்படுகிறது. இக்குலத்தைத் தேவேந்தர் குலம் என்றும் சிலர் அழைப்பர். தேவேந்திரன்போல் செல்வமும், சீரும், சிறப்பும் பெற்றவர்கள் இக்குலத்தார் என்பது இதன்பொருள். 'தேவந்தை' என்றும் கல்வெட்டில் இக்குலம் குறிக்கப்பட்டுள்ளது.

தேவர்கள் பெயரை மக்கள் வைத்துக்கொள்வது இயல்பாதலால் தேவேந்திரன் பெயர்பூண்ட ஒரு தலைவன் பெயராலும் இக்குலத்தின் பெயர் வழங்கப் பட்டிருக்கலாம்.

குன்னத்தூர், பெருமாநல்லூர்க் கோயில் கல்வெட்டுக்களில் தேவேந்திர குலத்தார் செய்த கொடைகள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

தேவேந்திர குலத்துக் காணிப்பாடலில் ஒருவர் 'தேவேந்திர குல திலதன்' என்று புகழ்ந்து கூறப்பட்டுள் ளனர். காங்கய நாட்டுப் பாடலில் இக்குலம் 'தர்மமிகு தேவேந்திரகுலம்' என்று புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது

அண்டினவரை ஆதரிப்பவர்கள் சிவனை மறவாத சிந்தை உடையவர்கள். தேவேந்திர குலத்தலைவர் சின்னத் தம்பிக்கவுண்டர் புலவர்களை ஆதரித்தவர். அவர்மகன் குமார சின்னயகவுண்டர் பாண்டியனுக்கு நிகரானவர் என்று கூறப்படுகிறார்.

அவர்கள் 'அரசு புரிந்திருப்போர்' என்றும், செகமண்டலாதிபதி' என்றும் கூறும் தொடர்களால் அவர்கள் காணியூர்களில் அதிகாரம் செலுத்தி வாழ்ந் திருப்பது புலப்படும். அவர்கள்,

மங்கை, எளம்பள்ளி, மண்ணறை, பெருங்குறிச்சி, முருங்க மங்கலம் கீரனூர், காகம், விளக்கேத்தி, ஆரியூர் வேளாம்பூண்டி, மொஞ்சனூர் போன்ற ஊர்களைப் பழைய காணியாகக் கொண்டவர்கள்.

'மண்டல மதிக்கவரு தென்னீசு பரன்வளர்
மங்கைஎளம் பள்ளிநகரும்
மண்ணறை பெருங்குறிச் சிப்பதி முருங்கமொடு
மங்கலம் கீரனூரும்

விண்டல மளாவுபுகழ் கொண்டதென் காகம்
விளக்கேற்றி ஆரியூரும்
மிக்கவே ளாம்பூண்டி மொஞ்சனூர் இதுவெலாம்
மிகஅரசு புரிந்திருப்போன்

அண்டிம தாபரன் தேவேந்திர குலதிலதன்
அதனில்வரு காராளனே
ஆவுடை மகாலிங்கர் உமையதிரு வல்லிதன்
அடியிணையை மறவாதவர்

செண்டுமுலை யார்மதன வேள்சின்னத் தம்பிஅருள்
சேயன் உபாயதுாயன்
தென்னவனை நிகரான குமாரசின் னையனே
செகமண்ட லாதிபதியே

என்பது தேவேந்திர குலத்தார் காணிப் பாடலாகும்.

## கீரை குலம்

சங்க காலத்தில் மக்கள் 'கீரன்' எனப் பெயர் கொண்டு விளங்கியதைச் சங்க இலக்கியங்களும், பழந் தமிழ்க் கல்வெட்டுக்களும் நன்கு விளக்குகின்றன. நக்கீரன், கீரன் ஓரி, இளங்கீரன், பெருங்கீரன், கீரனார் போன்ற பெயர்கள் உள்ளதை நாம் அறிகின்றோம்.

கீரன் என்பவரைக் குல முதல்வராகக் கொண்டு விளங்கிய குலம் கீரன் குலம் என்று முதலில் அழைக்கப் பட்டது. காலப்போக்கில் கீரன்குலம்—கீர குலம் என்றாகி இறுதியில் கீரை குலம் என்று வழங்கப்பெறுவதாயிற்று.

கீரனூர் என்ற ஊர்ப் பெயர் கீரகுல—கீரை குல அடிப் படையில் எழுந்தது என்பதே இக்கீரனூர்க் காணியாளர் களாகிய கீரை குலத்தாரின் புகழையும், பெருமையையும் விளக்கும்.

கம்பர் பாடியதாகக் கருதப்படும் காணிப்பாடல்களில் முதல் பாடலில் இக்குலம் கீரன் குலம் என்றே குறிக்கப் பெறுகிறது.

'சேரன் பாண்டி யன்பனகன்
செங்கோல் பெரியன் செம்பவளன்
தூரன் ஆந்தை காடைகுலம்
துவங்கு முடியன் ஓதாளன்
பாரம் சுமந்த பண்ணை குலம்
படியளந் துண்ணும் பயிர குலம்
கீரன் வேந்தன் கோவேந்தன்
கூரை பொன்னர் கொங்கினரே'

என்பது கொங்கு காணியான பட்டயத்தில் காணப்படும் பாடலாகும்.

கீரன் குலம்—கீரை குலம் என்றும் இலக்கிய ஆட்சி பெற்று விளங்குகிறது. காங்கேய நாட்டுக் காணிப் பாடலில்,

'தளிரிலகு கீரை'

என்ற தொடர் காணப்படுகிறது.

பார்ப்பதிக் காணிப்பாடல்

'தரணிபுகழ் பார்ப்பதித் தோடைகுல தீபனை
தந்திரமிகு கண்ணந்தையை
தனதானக் காடையை கீரைவண் ணக்கனை
தருவாணனை செட்டியை'

என்று கீரை குலம் அவவூருக்குரிய குலம் என்று கூறுகிறது.

ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகு மலைக் குறவஞ்சி பெரும்பாலான கொங்கு வேளாண் குலங்களை ஒரே பாடலில் தொகுத்துக் கூறுகிறது. அப்பாடலில் கீரன் குலம்—கீரைகுலம் என்றே குறிக்கப்படுகிறது. மேலும் அப்பாடலில் கீரனூர்க் காணியாளர்கள் அறுவரின் பெயர் களும் வருவதால் அப்பாடல் இங்கு அளிக்கப்படுகிறது.

'பொன்னர் ஓதாளர் பூசர் செம்பூதர்
அன்னதரு காரன் ஆவண் சாத்தந்தை
கோவர் குழாயர் கோவேந்தர் செம்பர்
மாவலர் பண்ணர் மாடை காடை
பூச்சந்தை ஆந்தை பொருளந்தை ஒழுக்கர்
வாச்ச கண்ணந்தை மணியன் தூரன்
செங்குண்ணி படுகுண்ணி சேகர் செவ்வாயர்
செங்கண்ணர் வண்ணக்கர் சேரன் சிலம்பன்
புத்தன் பொடியன் பூந்தன் வேந்தன்
முத்தன் காரி மூல குலத்தான்
களிஞ்சி நீலன் கணவாளன் அழகன்
விளியன் விலையன் வில்லி செல்லன்
ஆடை அழகன் ஆதி அந்துவன்
சேடன் பதரி சேரலன் மூரியன்
பெரிய குலத்தான் பெரழந்தை கடுந்துளி
வழிவிழி பவளன் மாதங்க கோத்திரன்
பனைபூந்தாரன் கோரக்கர் பாண்டியர் கணக்கர்
குணியன் குண்டலி கூரை கீரை
நீலன் மேதி நேரியன் சூரியன்
சூல குலத்தான் சோதி தேவேந்திரன்...'

கீரன் என்ற சொல்லுக்கு 'மிகுந்த புகழ் ஏந்தியவன்' என்று டி. எம். காளியப்பா அவர்கள் பொருள் கூறுகிறார்கள், கீரன் குலத்தார் பெயரால் கொங்கு நாட்டில் பல ஊர்கள் உள்ளன. செங்கீரன், கருங்கீரன் என்ற கீரைகுலத்தின் உட்பிரிவுகள் காலப்போக்கில் மறைந்துவிட்டன.

கீரனூர் தவிர பாப்பினி, நகியனூர், கோடந்தூர். கன்னிவாடி ஆகிய ஊர்கள் கீரை குலத்தாரின் காணி ஊர்கள் ஆகும்.

# குலகுருக்கள்

கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்று விளங்கியது கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத் தலங்கள் ஏழு. அவை கரூர், வெஞ்சமாங்கூடல், அவிநாசி, பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. அவ்வேழு தலங்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் வழக்கம் கொங்கு நாட்டில் இருந்தது. அதனை,

ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை
நீதி அவிநாசி நீள்நணா—மேதினியின்
தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை
நெஞ்சமே நித்தம் நினை

என்ற வெண்பா சிறப்புடன் விளக்குகிறது. காங்கேய நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரே நாளில் இவ்வேழு தலங்களையும் வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதைத் தனிப்பாடல்கள் விளக்குகின்றன.

இவ்வாறு சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண்குலப் பெருமக்கள் பலரும் தங்களுக் கென்று தனித்தனியாகக் குலகுருக்களை நியமித்துக் கொண்டு பலர் தீட்சை பெற்றுச் சைவசமயச் சிறப்புடன் நலமாக எல்லாப் பேறும் பெற்று வாழ்ந்தனர். குலகுருக்கள் சைவம்பேணி ஆலயங்களைக் காத்து, அடியார்க்கு ஆசி வழங்கிச் சிறப்புடன் திகழ்ந்தனர்.

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய கொங்கு வேளாண் பெருமக்கள் 'தங்கள் குலகுருவுடன் வந்தனர்' என்பதைப் பல செப்பேடுகள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்ததும் நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை நியமித்தனர் என்று ஒரு ஓலைப்பட்டயம் கூறுகிறது.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும்போது சோழநாட்டிலிருந்து சிறந்துள்ள ஆதி சைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

**'குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள் கொங்கினிடை**
**தலபூசை நன்குறத் தன்நாட்டு ளாரில் சமர்த்தர் கண்டு**
**நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு**
**வலவாதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு மண்டலமே'**

என்ற சதகப் பாடல் மூலம் அதனை அறியலாம். ஒரு சில செப்பேடுகள் சோழ நாட்டுத் திருக்கடையூரிலிருந்து அவர்கள் வந்ததாகக் கூறுகின்றன. சில குருக்கள் காஞ்சி புரம் தம் பூர்வீகக் காணியூர் என்று கூறுகின்றனர். கீரனூர்க் குருக்கள் திருக்கடையூர் வழியினர்.

கொங்கு வேளாளர்கட்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு, பட்டயங்கள் உறுதிப்படுத்து கின்றன.

'கந்தமாபுரிப் பட்டணம் அதிலுள்ள பதினெண் குடிகள் இந்தத் திருமுருகபூண்டி ஆதினத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்துக் குருக்களான படியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்'

என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கொங்கு வேளாளர்கள் தங்கள் குலகுருக்களை எவ்வாறு மதித்தனர் என்பதைக் கொங்கு நாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

'நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலே யிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷம்பிரதி குடுத்துச் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக் கையும் அப்பணைப் படிக்கி உபதேசம் பாதபூசை முதலானதும் பண்ணிக்கொண்டு எங்கள் வமுசத் தார் புத்திரபவுத்திர பாரம்பரியமாயி உபதேசம் பண்ணிக்கொண்டு சுவாமியார் தெண்டினை கண்டினை ஆணை ஆக்கினை அப்ராதத்துக்குட் பட்டு நடந்து கொள்ளுவோமாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்துகொள்ளு வோமாகவும். இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி எங்கள் வமுசத்தார் பயபக்தியாய் நடந்துவந்தவன் சுகமாயி தனசம்பத்தும் தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் ஆயுளாரோக்கியமும் தேவப் பிரசாதமும் குருப்பிரசாதமும் மேன்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்திராதித்தாள் உள்ளவரைக்கும் சுகமாயிருப்பார் கள்.'

உடல், பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம்செய்து பட்டயம் எழுதித்தந்துள்ளனர். வாரிசு இல்லாத சொத்து குலகுருவுக்கே என்றும் சிலர் கூறினர்,

'குருவே சிவம்' என்று திருமூலர் முதலிய சான்றோர்கள் கூறிய சிறந்த வழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்துள்ளனர்.

குருக்கள்புரம், குருக்கள்பாளையம், தம்பிரான் வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப்பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக் கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும். காடையூரில் பொருளந்தை குலத்தார் 'குருக்களய்யன் பாளையம்' என்ற ஊரும், குலகுருக்கள் மடமும் ஏற்படுத்தியுள்ளனர். அங்கு குருக்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து அடியார்களுக்கு அருளியும் ஆலயத் திருப்பணியில் பங்கு கொண்டும் சிறந்துவருகிறார்கள்.

வேறு கொங்கு நாட்டின் எந்தப் பகுதிக்கும் இல்லாத சிறப்பு காங்கேய நாட்டுக்கு உண்டு. இங்குதான் காங்கேய நாட்டுப் பதினான்கு ஊர்களுக்கும் பனிரண்டு குருபீடங் கள் உள்ளன.

கீரனூர்த் திருமடத்தில் சிவத்திரு. வி.எஸ். சிவசுப்பிரமணிய கொடுமுடிப் பண்டித குருசுவாமிகள், சிவத்திரு. வி. எஸ். கிருஷ்ணசாமி சேனாதிபதி கொடு முடிப் பண்டித குருசுவாமிகள் ஆகியோர் அருளாட்சி நடத்துகின்றனர்.

கீரனூர்க் காணியாளர்கள் தங்களுக்குப் புலவர்கள் நிர்ணயம் செய்த பட்டயத்தில் முன்னிலையாகக் கீரனூர் மடத்துக் கொடுமுடிப் பண்டிதரை இருக்கச் செய்து அவர் கையொப்பத்தையும் பெற்றுள்ளனர். கீரனூர்க் காணியாளர்கள்,

'குருராயன் மலைய கொடுமுடிப் பண்டிதர்
கொடுத்தவெண் ணீறு புனையும்
துங்க வேளாளர்'

என்று அழைக்கப்பட்டனர்.

கீரனூர் மடத்துக் கொடுமுடிப் பண்டித குரு சுவாமிகள் காங்கேய நாட்டுக் கீரனூரில் அருளாட்சி செய்தாலும் குறுப்பு நாட்டுக் கொடுமணல் காணியாளர்களான பனங்காடை, பாண்டியன், சேரன் குலத்தார் குலகுருக்களாகவும் விளங்குதல் சிறப்புக் குரியது.

# வரலாற்று ஆவணங்களில் காணியாளர்கள்

கொங்கு நாட்டில் பல வரலாற்று ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவை கல்வெட்டாகவும், செப் பேடாகவும், ஓலைச் சுவடியாகவும், காகிதப் படிகளாகவும் உள்ளன. அவற்றில் ஒப்பந்தங்களில் பங்கு கொள்பவர் களாகவும், சாட்சிகளாகவும் கொங்கு வேளாண் பெரு மக்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

கரூர் வட்டத்தில் நாகம்பள்ளி செல்லாண்டியம்மன், அணைக் கருப்பணசுவாமி கோயில்களில் இறைபணி புரியும் பண்டாரங்கள் தங்களுக்குள் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஆதி, அந்துவன்குல வேளாண்பெருமக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

கொங்கு காணியான பட்டயத்தில் கம்பர் பாடிய தாகக் குறிக்கப்படும் காணிப்பாடல்களில் ஒரு பாடல் காட்டப்பட்டுள்ளது. அப்பாடலில் காடை குலமும், கீரை குலமும் குறிக்கப்பட்டுள்ளன. அப்பட்டயத் தில் திருக்கடையூர் குருக்கள்வேளாளருடன் கொங்கு நாடு வந்து குடியேறிய தலங்கள் சிலவற்றில் 'காங்கயத்துக் கீரனூர்' குறிக்கப்பட்டுள்ளது. பிற ஊர்கள் பெரும் பழனை நகரி, அமுக்கயம், கத்தாங்கண்ணி, வீரசோழ புரம், பச்சை நகரம், பழனியூர், கொடுமுடி, கரூர், மடவளாகம், பேரூர் என்பன. இவை அனைத்தும் சமயச்

சிறப்பு வாய்ந்த ஊர்கள். இவற்றுடன் கீரனூரையும் சேர்த்திருப்பது சிறப்பு மிக்கதாகும்.

தனிப்பாடல் ஒன்றில் பரமேஸ்வர பண்டிதரிஎன்னும் சைவசமயப் பெரியவருக்குரிய சில கொங்கு நாட்டுக் காணியூர்கள் குறிக்கப்படுகின்றன. அலங்கயம், மூலனூரி, இராயகுளம், நீலம்பூரி, பருத்திநகரி, கீரனூரி போன்ற ஊர்களில் கீரனூரி இறுதியில் கூறப்பட்டிருப்பது சிறப்பு மிக்கதாகும். சிறப்புடைப் பெயரைப் பிற்படக் கிளத்தல் என்பது இலக்கண விதியாகும். அச்சிறப்புமிகு பாடல்

**'நீடி உயரும் அலங்கயம் மூலனூர் நிச்சயமாம்**
**பாடிய ராய குளமறை நீலம்பூர் பன்னுபொன்னி**
**கூடிப் பருத்தி நகர்கீர னூரும் கூர்பகவாய்**
**நாடிய மேன்மைப் பரமேசப் பண்டிதர் நற்றலமே!**

என்பதாகும்.

முகுந்தநல்லூரிப் பட்டயம், நல்லூரிப் பட்டயம், திருவாச்சிச் செப்பேடு, கொங்குப் புலவரி பட்டயம், காலிங்கராயன் அணைகட்டின பட்டயம், கதிதாங் கண்ணிச் செப்பேடு, பூந்துறை நாட்டாரி மேலோலை, பாசூரிச் செப்பேடு போன்ற பலவரலாற்று ஆவணங்களில் காடை குலத்தாரி பெயரிகள் காணப்படுகின்றன. அவரிகள் பெயரிகள், அவனாசி முத்தணகவுண்டரி, வாரணவாசிக் கவுண்டரி, முத்தய கவுண்டரி என்பன வாகும்.

18.4.1792ஆம் ஆண்டு பழைய கோட்டைப் பட்டக் காரி அவரிகள் மரபில் தீரன் சின்னமலை என்று அழைக் கப்பட்ட தீரித்தகிரிச் சரிக்கரைக் கவுண்டரி, அனுமந்தக்

கவுண்டர் என்னும் வேட்டுவக் கவுண்டரிடமிருந்து பட்டாலியூரில் இருந்த நிலத்தில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கினார். வெள்ளையரை எதிர்த்துப் போர் செய்த சின்னமலை, போர் நடவடிக்கைகளுக்கும், ஆயுதங்கள் செய்யவும் அந்நிலத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காங்கேயநாட்டுப் பெருமக்களில் கீரனூர்ச் சின்னத்தம்பிக் கவுண்டரும் ஒருவர். விடுதலைப் போரில் வீர முழக்கமிட்ட தீரன் சின்னமலைக்குப் பட்டாலி அருகில் உள்ள கீரனூர்க் காணியாளர்கள் உதவியிருப்பது சிறப்புமிக்க செயலாகும்.

கீனூரார்ப் புலவர் பட்டயம் ஆதி, காடை, அந்துவன், கீரை, விலையன், தேவேந்திரன் ஆகிய ஆறு காணியாளர் கள் சேர்ந்து எழுதிக் கொடுத்துள்ளனர். ஆனால் அதில் கையொப்பமிட்டவர்கள் காடையூர்க் காங்கேய மன்றாடியார், பழைய கோட்டைப் பட்டக்காரர், கீரனூர் குருசுவாமிகள் கொடுமுடிப் பண்டிதர், ஆதி, அந்துவன் குலத்தினர் ஆவர்.

# கீரனூர்ப் புலவர் பட்டயம்

கீரனூர்க் காணியாளர்கள் ஆறு குலத்துக் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் அனைவரும் அருள்மிகு செல்வ நாயகியம்மன் சன்னதியில் ஒன்றாகக் கூடித் தங்கள் ஊரான கீரனூர்க்குப் புலவரை நியமித்துக் கொண்ட ஓலைப்பட்டயம் ஒன்று கிடைத்துள்ளது.

கொடுமணல்—தம்மரெட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் வீட்டில் கிடைத்த அந்த ஓலைச்சுவடி இப்போது ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக உள்ளது.

கீரனூர்க்குத் தனியாகக் கிராமத்து ஆதிகனாகவும், இராசபடி பால் வருத்தனை வாங்கும்படி ஒரு புலவரை நியமிக்கக் கீரனூர் ஆறு காணியாளர்களும் விரும்பினர். குறுப்பு நாட்டில் தென்முகம் பங்குக்கு உரியவரும், கொடு மணலில் இருந்தவருமாகிய பழனிமலைப் புலவர் மகன் சென்னிமலைப் புலவரைத் தங்கள் கிராமம் கீரனூர்க்கு ஆதீனப் புலவராக நியமித்துக்கொண்டு ஓலைப் பட்டயமும் எழுதித் தந்தனர்.

புலவர் நியமனம் காடையூர்ப் பட்டக்காரர் இம்முடிக் குமார காங்கேய மன்றாடியார், பழைய கோட்டைப் பட்டக்காரர் சர்க்கரை மன்றாடியார், கீரனூர் மடத்துக் குருவும், குலகுருவும் ஆகிய கொடுமுடிப் பண்டிதர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

காணியாளர்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பட்டயம் எழுதிக் கொடுத்துள்ளனர். இதற்கு யாரும் நிந்தனை சொல்லக்கூடாது. அப்படி யாராவது நிந்தனை சொன்னால் அவர்களுக்குக் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷம் வரும் என்று எழுதினர். குலதெய்வம் செல்வநாயகி முன்னிலையில் இப்பட்டயம் எழுதப்பட்டது. பட்டயத்தில் இரு பட்டக்காரர்களும், குருசுவாமிகளும், காணியாளர்கள் சிலரும் கையெழுத் திட்டுள்ளனர்.

கீரனூர் ஆதினப் புலவர் சென்னிமலைப் புலவர் வாரிசாகத் தம்மரெட்டிபாளையத்தில் நாச்சிமுத்துப் புலவர் என்பவர் இன்றும் வாழ்ந்து வருகிறார். அவரை ஆதரிப்பது கீரனூர்க் காணியாளர்கள் கடமையாகும்.

## மூலம்

ஸ்ரீராமசெயம். சுப்நமத்து ஸ்ரீமண்ணமண்டலீசுபரன் பாஷைக்கித் தப்புவறாத கண்டன், ஆரியதள விபாடன், ஆறியர் மோகந் தவிள்த்தான், துலுக்கர்தள விபாடன், தொட்டியர் மோகந் தவிள்த்தான், ஒட்டியதள விபாடன், ஒட்டிய மோகந் தவிள்த்தான், பலனாவுக்கு குரைவு வறாத மன்னன், கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதகண்டன், விண்விசைக் கண்விசை ஈளமும் ஆளமும் ஏர்ப்பாணப் பட்டணமும் கொண்ட நரபதி கெசபதி அசுவபதி தளபதி, நால்வகைப் படையோடுங் கூடிய கெசவேட்டைக் கெழுந்தருளிய றாசாதிறாசன், றாசமாத் தாண்டன், றாசகுலதிலதன், றாசகெம்பிரன், னாடாளும் னாயகன், றாசகுலதுங்கன், பூலோக தேவேந்திரன், ஆரணமுரையர் ஆறிலொரு கடமை கொண்டு ஆடுங் கடைமணி னாவசையாமல் அரசாளும் றாசன்,

காங்கய நாடு காடையூரு இம்முடிக் குமார காங்கய மண்டாடியாரவர்களும், பளயகோட்டைச் சக்கரை மண்டாடியாராவர்களும், குருவாகிய கொடுமுடி பண்டித ரவர்களும், கீறனூருக் கிராமத்துக்கு ஆதி குலத்தில் சின்னத்தம்பிக் கவுண்டரு, குப்பண கவுண்டரு, காடை குலத்தில் வெள்ளைக் கவுண்டரு, முத்துப் பெரியண கவுண்டரு, அந்துவ குலத்தில் றாசாக் கவுண்டரு, செல்லப்ப கவுண்டரு, கீரைக் குலத்தில் கருமண கவுண்டரு, விலைய குலத்தில் செல்லய கவுண்டரு, தேவேந்திர குலத்தில் சிவன்மலைக் கவுண்டரு யித்தலதி தனை வோருகளும் சேர்ந்து யெளுதினது. சாசனம் யென்ன வென்றால் குருப்பை நாட்டில் பால்சாப்பிடும் பளனி மலைப் புலவன் மகன் சென்னிமலைப் புலவனை நாங்களனைவரும் சேர்ந்து காங்கயனாடு கீறனூரு கிறாமத்துக்கு ஆதிகனாகவும், றாசபடி பால் வருத்தினை யும் வாங்கும்படி புலமை நிலைநாட்டுச் செய்து இருக் கிறோம்.

யிதுக்கு யாதாமொருத்தர் நிந்தினை சொல்லக் கூடாது. அப்படி நிந்தினை சொன்னவர்கள் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற :தோஷத்துச் சேர்வார் கள். ஆண்டவர் துணை. யிது யெழுதினது செல்வினாயகி முன்னிலைக்கி எழுதின பட்டயம்.

காடையூரு இம்முடிக் குமார காங்கய மன்றாடியார் ருசு. பளயகோட்டைச் சக்கரை மன்னாடியார் ருசு. கொடு முடிப்பண்டிதர், சின்னத்தம்பிக் கவுண்டர் ருசுவு. குப்பண கவுண்டர் ருசு. அந்துவ குலம் றாசாக்கவுண்டர் றுசு.வு

# சோழன்பூர்வ பட்டயத்தில் கீரனூர்

திருவாரூரில் கரிகால சோழன் என்ற சோழமன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அவன் மகன் திருவாரூர்த் தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடும் பொழுது தேர்ச் சக்கரத்தில் காராம் பசுவின் கன்றுக்குட்டி ஒன்று சிக்கி இறந்துவிட்டது.

தாய்ப்பசு கரிகாலன் அரண்மனையில் ஆராய்ச்சி மணியை அடித்து அரண்மனை வாசலில் மூன்றுநாள் புல், தண்ணீர் தொடாமல் படுத்திருந்தது. காரியக்காரர் முறை செய்ய அரசன் அதன் காரணத்தை விசாரித்தான்.

நேரில் நிகழ்ச்சியைக் கண்ட காரியக்காரர் சாட்சி சொன்னார். தன் மகன் செய்தது தவறென்று தெரிந்து அதேபோலத் தன் மகனைத் தேரூர்ந்து கொன்றான் கரிகால சோழன்.

அதனால் கரிகால சோழனுக்குப் பைத்தியம் பிடித்தது. காஞ்சி காமாட்சி குறத்தியாக வந்து கொங்கு நாட்டில் 360 சிவாலயம் பிரதிட்டை செய்தால் கரிகால னுக்குப் பிடித்த பைத்தியம் நீங்கும் என்றாள்.

அதன்படி கரிகால சோழன் கொங்கு நாட்டில் 360 சிவாலயம் கட்டி நொய்யலாற்றில் 32 அணையும் கட்டினான். அவ்வாறு கட்டிய நொய்யல் அணைகளில் கீரனூர் அருகில் உள்ள பாலத்தொழு அணையும், கொடு மணல் அணையும் அடங்கும் என்பது குறிப்பிடத் தக்க

தாகும். இது அப்போது சேரநாட்டுப் பகுதி ஆகையால் சேரமான் பெருமாளும் இத் திருப்பணியில் கலந்து கொண்டார்.

கரிகால சோழன் சமயமுதலி, சடையப்பன், கஸ்தூரி ரங்கப்பசெட்டி ஆகியோரை அழைத்துக்கொண்டு விசய மங்கலத்தில் கோயில் திருப்பணி முடிந்து கீரன் என்னும் இருளன்பதி வனத்துக்கு வந்தான். வேடர் கம்பளம் காடுகளை அழித்தபோது வனம் காத்த கண்டிகாளி எனும் துர்க்கை முப்பலி கேட்டது. சமயமுதலி அதற்கு ஒப்புக்கொண்ட பின் துர்க்கை மனம் பொருத்து வழி விட்டது.

கீரன் என்ற இருளன் பெயரால் கீரனூர் என்ற இவ்வூரை ஏற்படுத்தினர். கோட்டை, பேட்டை கட்டிக் குளமும் கீரனூரில் வெட்டப்பட்டது. 18 சாதிப் பல குடிகளையும் கீரனூரில் குடி அமர்த்தினர்.

வேளாளரில் தேவணன் என்பவரையும்* வணிகரில் வரத செட்டியாரையும் பூவிலுவரில் கண்டிமண்ணாடியை யும், கணக்கரில் சிவலிங்கப் பிள்ளையையும் நியமித்துத் துர்க்கை கண்டிகாளிக்குக் கோயிலும் கட்டினார். அக்கோயில் கீரனூரில் உள்ள துக்காச்சியம்மன் கோயிலாகும்.

---

* கீரனூர்க் காணியாளர்கள் பாடலில் முதல் குலமான ஆதிகுலப் பாடலில் தேவண கவுண்டர் என்று பெயர் வருவது சிறப்புக்குரியதாகும். சோழன்பூர்வ பட்டயம் குறிப்பிடும் தேவணன் என்ற பெயர் கீரனூர் முதல் காணிப்பாடலில் வருவது மிகவும் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்ததாகும்.

நூறு பொன் வருவாயுள்ள கிராமும், பத்துப் பொன் சுங்கத் தீர்வையும், 10 மிடா விரைப்புப் புன்செயும், குளக்கரையில் 10 மிடா விரைப்பு நன்செயும் கோயிலுக்கு மானியம் விட்டுச் குலக்கல் நடப்பட்டது. சமய முதலிக்குப் பத்தில் ஒரு பங்கு என்று கல்வெட்டும் வெட்டப்பட்டது.

கோரக்க நாதர் வழிவந்த முத்துக்குமார பண்டாரம் என்பவர் பூசைக்கு நியமிக்கப்பட்டார். பரிசாரகத்திற்குப் பணியாட்கள் நியமிக்கப்பட்டனர். சீர்பாத ஊழியத்திற்கு 30 குடிகள் கைக்கோளர் நியமிக்கப்பட்டு இருளப்ப முதலியார் அவர்கள் நாட்டாண்மைக்காரர் ஆனார்.

வடமலை நட்டுவன், செண்பக மாணிக்கி, கோயில் மணியத்திற்கு இராமலிங்கமுதலி, ஆகியோர் நியமிக்கப்பட்டு ஓலைப்பட்டயமும் எழுதப்பட்டு வெற்றிலை பாக்கும் கொடுக்கப்பட்டது.

ஆண்டுதோறும் விழா நடத்தி முப்பலி கொடுக்க ஊர் மக்கள் ஒப்புக்கொண்டனர். கிராம தேவதை துர்க்கையும் மக்களைக் காக்க ஒத்துக்கொண்டது. சேர அரசன் உட்பட எல்லோரும் துர்க்கையை வணங்கிச் சென்றனர். கீழே சோழன் பூர்வ பட்டயத்தின் பகுதியைக் காணலாம்.

## மூலம்

'விஜயபுரி நகரி கடந்து சமைய முதலி கைப்பட்டி ஒழுகின் படிக்கு கீரனென்கிற இருளன்பதி வனத்திற்குப் போனார். போனபின்பு சேரமான்பெருமாள் கீரனென்கிற இருளன் பதிவனத்தை வேடர் கம்பளத்தவரை வரவிட்டுச் செடி வெட்டிவித்து நகரம் கட்டிவைக்க வேண்டுமென்று

செடி வெட்டிவைக்கும்போது அந்த வனங் காத்திருந்த கண்டிகாளி என்கிற துர்க்கை பத்திரகாளி சேரனிடத்திற்கு வந்து பலிகேட்டது. அது கேட்குமிடத்தில் சேரன் சமைய முதலியை அழைத்து அந்த துர்க்கைக்கு ஒப்புச் செய்யச் சொன்னார்.

அவர் சொன்னபடிக்குச் சமைய முதலியும் அந்த துர்க்கைக்கு இந்த நகரமும் கட்டிவித்து குடி ஏற்றி வைத்த பின்பு சேரனைக் கொண்டு உனக்கும் கோவில் கட்டி வைத்து உன்னையும் நிலை நிறுத்தி உனக்கு முப்பலியும் நானே நடப்பிவிக்கிறேன் என்று சமைய முதலி அந்த துர்க்கைக்கு ஒப்புச் சொன்னார். அவர் சொன்னபடி கேட்டு துர்க்கை மனம் பொறுத்து நின்ற பின்பு சேரமாம் பெருமாள் வேடர் கம்பளத்தவரை விட்டுச் செடி வெட்டி வெளி பண்ணி வைத்து அந்த வனத்தில் குடியிருந்த கீரனென்கிற இருளன் பேர்க்கு நகரமும் கீரனூர் நகர மென்று நகரமும் கட்டி வைத்துக் கோட்டையும் பேட்டையும் ஒரு குளமும் கட்டி வைத்தார்.

அவர் கட்டி வைத்தபின்பு சமைய முதலி, சடையப்பன், கத்தூரிரங்கப்ப செட்டியும் அம்மூன்று பேருமாகப் பதினெண் சாதிப் பல குடியுமழைத்து அந்த நகரில் குடிவைத்து அதில் உழவு குடியான பல குடிக்கும் முதன்மையாகச் சோள தேச செந்தலை நகரில் வேளாளரில் தேவணனென்கிறவனைச் சடையப்பன் வைத்தான். அதில் சேடம்மையான பல குடிக்கும் முதன்மையாகக் கவறை வலைஞ்சியரில் வரத செட்டியைக் கத்தூரி ரங்கப்பச்செட்டி வைத்தான். அவர்கள் வைத்து நிகுதி செய்த பின்பு சேரன் அந்தக் கிரனூரதி காரத்திற்கும் கோட்டையதிகாரத்திற்கும் பூவிலுவரில் கண்டிமண்ணாடியை வைத்து அதில் கர்ணத்திற்குத்

திருக்கணக்கரில் சிவலிங்கப் பிள்ளையை வைத்து நிகுதி செய்தார்.

நிகுதி செய்த பின்பு சேரமான் பெருமாள் அந்தக் கிரனூர்க் கண்டி காளியம்மனுக்குத் தம்முடைய பேருக்கு அந்தக் கிரனூர் காவலாக உத்திரவாசல் கோவிலும் கட்டி வைத்தார். அவர் கட்டி வைத்த பின்பு சமைய முதலியா கிறவர் உத்தம பண்டிதரை அழைத்து அந்தக் கிரனூர் கிரைக் கண்டிகாளியம்மனை நிலைநிறுத்தி வைத்துப் புண்யாங்க அஷ்டமந்திரப் பிரதிஷ்டையும் செய்வித்தார்.

அவர் செய்வித்த பின்பு சேரமாம் பெருமாளென்னும் சேரன் அந்த ஆலயத்திற்கு விட்ட மாணியம் நூறு பொன் கிராமமும், பத்துப் பொன் சுங்கத் தீர்வையும், பத்துமிடா விரைப்புப் புஞ்செய்யும், குளக்கரையில் பத்துமிடா விரைப்பு நஞ்செய்யும் விடுவித்தவிட்ட மானியத்திற்கு நாலு சூலக்கல் நாட்டும் பொடுவித்து அந்த ஆலயத்திற்கு விட்ட மானியத்தில் சமைய முதலிக்குப் பத்திலொன்று என்று கிரனூர் கிரகண்டி காளியம்மன் கோவிலில் கல்ச் சாசுரம் போடுவித்து சேரன் நிகுதி செய்த பின்பு,

சமைய முதலியாகிறவர் அந்த ஆலய ஊழியத்திற்கு ஆதிசோதி கோரக்கநாதர் வர்க்கத்தில் முத்துக்குமார பண்டாரத்தை வைத்து அந்தப் பண்டார முதலாக நாகபாச திருவலகை கடவரைக்கும் ஆள் போடுவித்துத் திருவாடு தண்டிகைச் சீர்பாத ஊழியத்திற்குக் கைக்கோள் வரில் முப்பது குடியும் வைத்து அந்த முப்பது குடிக்கும் பண்டார முதல் திருவலகுவரைக்கும் முதன்மை நாட்டாண் மைக்குக் கைக்கோள்வரில் இருளப்ப முதலியை வைத்து நாகபாச முதன்மைக்கு வடமலை நட்டுவனை வைத்துத் தாசி முதன்மைக்குச் செண்பக மாணிக்கியை வைத்து

அந்தக் கோவிலூழியத்திற்கு மணியம் கணக்குக் கைக் கோள்வரில் ராமலிங்க முதலியை வைத்து,

அவர்களுக்கெல்லாம் ஒலைப்பட்டையும் பாக்கு வெற்றிலையும் கொடுத்து சமைய முதலி நிகுதி செய்த பின்பு சமைய முதலியாகிறவர் அந்தச் சீர்கண்டி காளி யம்மனுக்கு அந்தப் பண்டாரத்தைக் கொண்டு அபிஷேக தூப தீபாறாதனை முடிப்பித்து அந்த முகத்தில் ஆடு பன்னி கோழி அறுத்துப் பலியூட்டி வைத்து நாம் முன் சொன்ன முப்பலியும் வந்ததென்று அந்த அம்மனுக்கு ஒப்பிவைத்து,

அந்த முகத்தில் அவ்வூரிலுள்ள குடிவரிசை ஜனங் களுக்கு இந்தம்மனுக்கு நீங்கள் வருஷமொரு நாள் திருநாள் நடத்திவைத்து அந்த நாளில் ஆடுபந்றி கோழி யறுத்துப் பலியூட்டி வைத்துப் பொங்கல் விளக்கு நீங்கள் கட்டின வீடு தோறும் எடுத்துக்கொடுத்து வருஷமொரு எருமைக்கிடாப் பலியும் இந்தம்மனுக்குக் கொடுத்து வாருங்களென்று அவர்களுக்குக் கட்டுச் செய்து அந்த துர்க்கைக்கு அவர்களிடத்தில் பலி பொங்கல் வாங்கிக் கொண்டு அவர்களுக்கும் இந்தக் கிராம தேவதையா யிருந்து அவர்களையும் ரக்ஷித்து வாருங்களென்று அந்தத் துர்க்கைக்கு சமைய முதலி கட்டுச்செய்த பின்பு கரிகாலச் சோழன், சேரன், சடையப்பன், கத்தூரிரங்கப்பசெட்டியும் மற்றுமுள்ள பேருமாக அந்தம்மனைத் தரிசித்துக் கொண்டு சமைய முதலி கைப்பட்டி ஒழுகின்படிக்குக் கீரனூர் நகர் கடந்து கோனன் என்கிற இருளன் பதிவனத்துக்குப் போனார்கள்.

# செல்லாண்டியம்மன்

கீரனூர்க் காணியாளர்கள் ஆறு குலத்தாரின் குலதெய்வக் கோயிலாக விளங்கும் சிறப்புடையது செல்வ நாயகியம்மன் திருக்கோயிலாகும். கீரனூர்ச் செல்வ நாயகியம்மன் கோயில் முன்பு செல்லாண்டியம்மன் கோயில் என்றே வழங்கப்பெற்று வந்துள்ளது. இதனைக் கீரனூர்த் தனிப்பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

'கார்கொண்ட கருணைபுரி செல்லாண்டி யம்மையும்'
'சிங்கவா கினியான செல்லாண்டி யம்மையை'

என்பது அப்பாடல் பகுதிகளாகும்.

நெருவூர் என்றும் கோட்டைக்கரை என்றும் மதில் கரை என்றும் மருவி மதுக்கரை என்றும் வழங்கும் தொன்மையான இடத்தில் உள்ள திருக்கோயிலுக்கு மதுக்கரைச் செல்லாண்டியம்மன் என்று பெயர். அங்கு செல்லாண்டியம்மனுடன் கரியகாளியம்மன், பெரியநாயகி கோயில்களும் உள்ளன. அம்மூன்று திருக்கோயில்களும் முறையே சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்குக் குல தெய்வமாக விளங்கும் சிறப்பினை உடையது.

மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயில் சேரநாடு சோழநாடு, பாண்டியநாடு மூன்றுக்கும் எல்லை என்பது பண்டைய வழக்கு. சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரும் பத்தாண்டுகட்கு ஒரு முறையோ அல்லது தேவைப்படும்பொழுதோ மதுக்கரைச் செல்லாண்

டியம்மன் சன்னதியில் கூடியே தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வர்.

ஒரு முறை அவ்வாறு மூவேந்தரும் அங்கு கூடியிருக்கும் பொழுது அவர்களுக்குள் எல்லைத் தகராறு வந்துவிட்டது. அதனைச் செல்லாண்டியம்மன் அருளாலேயே தீர்த்துக் கொண்டனர். கிழக்கு நோக்கிச் சோழ விநாயகர் கோயிலும், தெற்கு நோக்கிப் பாண்டிய விநாயகர் கோயிலும், மேற்கு நோக்கிச் சேர விநாயகர் கோயிலும் அங்கு அமைக்கப்பட்டன. நடுவே தான் குடியிருப்பதாகச் செல்லாண்டியம்மன் கூறி எல்லைச் சண்டையைத் தீர்த்து வைத்தார்.

எல்லை பிரிக்கப்பட்டபின் அதை நிர்ணயம் செய்து மதிள்கரை அமைக்கப்பட்டது. பின் அப்பெயர் மதுக் கரை என்று மருவியது. எல்லையைப் பிரித்த செல்லாண்டி யம்மனே எட்டுக்கூடை மண் எடுத்து முதலில் தங்கக்கரை போட்ட பின் மூவேந்தரும் எல்லை நிர்ணயம் செய்யும் கரையை அமைத்தனர்.

இதனைத் தட்டயநாட்டார் தெவம் என்னும் பட்டயம் கீழ்வருமாறு விளக்குகிறது.

> 'சேரன் சோழன் பாண்டியன் மூவேந்தருக்கும் பங்குத் தகராறு வந்ததாம். அப்போது வடகை லாயம் சென்று பத்ரகாளி அம்மனைக் கூட்டிவந்து காவேரியும் ஆம்பராந்தியும் கூடும் துறையிலே உட்கார்ந்து சோழனுக்குக் கிழக்கேயும். சேரனுக்கு மேற்கேயும், பாண்டியனுக்குத் தெற்கேயும் பாகம் பிரிவினை செய்த ஆழங்கண்ட சோழன் நீளங்கண்ட வல்லங்கரையில் மண்ணைப் பிரித்த மதுக்கரைச்

செல்லாயி எட்டுக் கூடை மண் எடுத்துத் தங்கக்கரை போட்டபின்..."

இதே செய்தியைச் சற்று வேறு விதமாகக் கண்ண குலத்தார் பட்டயம் கூறுகிறது. செங்கற்படை வைத்து செல்லாண்டியம்மன் என்று பெயர் வைத்து மூவேந்தரும் கண்ணகுல நல்லதம்பிக் கவுண்டரும் கோயிலுக்குச் சென்றபோது அருளாடி ஒருவன் செல்லாண்டியம்மன் அருளால் எல்லை பிரிப்பதாகக் கூறும் செய்தி கூறப்படு கிறது.

'மூன்று செங்கற் பிடாரியைக் கொடுத்தான். தனக்கு மதுக்கரைச் செல்லாண்டியம்மன் என்று பேர் கொடுத்தாள். சபையார்களும், மூவராசாக் களும், நல்லதம்பிக் கவுண்டரும் கோயில் வலம்வந்து ஆலயத்துக்குள் போனார்கள். அப்போது ஒருவர் மீது சன்னதமான அருள்வந்து சொன்னதாவது சோழனுக்கு கிழக்கும், பாண்டியனுக்குத் தெற்கும், சேரனுக்கு மேற்கும் இந்த மூன்று யெல்லை நடுவில் செல்லாண்டி யம்மனாகிய நான் இருக்கிறேனென்றும் இந்த நல்லதம்பிக் கவுண்டருக்கு யினாம் விமரிசை கொடுத்தால் யெல்லைப் பிரிவு காண்பித்துக் கொடுக்கிறேனென்றும் அந்த அருளாடி சொன்னார் ...இராசாக்கள் மும்முடி நல்லதம்பி மன்றாடியாருக்கு பச்சைவடங்கொடுத்து பின்பு நல்லநாயகியம்மன் செல்லாண்டியம்மன், கோட்டைக்கரையம்மன் இந்த சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்து படி நெயி வேத்தியம் செய்து வைத்து பின்பு சபையோர்களும், வேந்தரும், நல்லதம்பி மன்றாடியாரும், மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலுக்குப் போயி அருளாடி

சொன்ன பிரகாரம் எல்லைப் பிரிவும் பாகமும் கண்டார்கள்.'

அதுமுதல் கொங்கு வேளாளர்கட்கு மதுக்கரைச் செல்லாண்டியம்மன் முழுமுதற் குலதெய்வம் ஆயிற்று. கொங்கு வேளாளர்கள் சோழ நாட்டிலிருந்து மதுக்கரை வழியாகவே கொங்கு நாட்டில் காவிரி, அமராவதி, நொய்யல், பவானி நதிக்கரைகள் வழியாகக் குடியேறினர். அதனால் தாங்கள் செல்லுமிடம் எல்லாம் மதுக்கரைச் செல்லாண்டியம்மனை எழுந்தருளச் செய்து வழி பட்டனர்.

பலர் பிற்காலத்திலும் மதுக்கரை சென்று செல்லாண்டியம்மன் கோயிலில் பிடிமண் எடுத்துக் கொண்டு வந்து தங்கள் ஊரில் செல்லாண்டியம்மன் பெயரில் கோயில் கட்டி வழிபட்டனர். இவ்வகையில் கொங்கு நாட்டில் உள்ள எல்லாச் செல்லாண்டியம்மன் கோயிலுக்கும் மதுக்கரைச் செல்லாண்டியம்மனே மூலக் கோயிலாகிறது.

பலர் செல்லாண்டியம்மனை செல்லாயி, செல்வ நாயகி. செல்விநாயகி, செல்லாயம்மன், செல்லியம்மன், செல்வியம்மன் என்ற பெயர்களில் வழிபடுகின்றனர். மதுக்கரையில் எழுதப்பட்ட கண்ணகுலப் பட்டயத்தி லேயே 'சிவசெல்வி துணை' என்ற தொடர் காணப்படு கிறது. எப்பெயரில் வழிபட்டாலும் அவ்வழிபாடு செல்லாண்டியம்மன் வழிபாடேயாகும்.

கொங்கு வேளாளர்கள் பல பட்டயங்களை மதுக்கரைச் செல்லாண்டியம்மன் சன்னதியில் எழுதினர். வேறு ஊர்களில் பட்டயங்கள் எழுதினாலும் 'செல்லாண்டி

யம்மன் துணை' என்று எழுதினர். சில பட்டயங்களில் விளக்கமாக.

'மதுக்கரையில் உபயகாவேரியில் தீர்த்தமாடி
மதுக்கரைச் செல்லாண்டியம்மன் தீர்க்காயுசு
புண்ணிய பாக்கியத்தைக் கொடுத்து இரட்சிப்பா
ராகவும்' என்று எழுதினர்.

மதுக்கரை சென்று செல்லாண்டியம்மனுக்கு விழா எடுத்தனர். கன்னிவாடி—மணலூர்ப் பட்டயம் ஒன்றில்,

'எழு படைக்கலக்காரி செய்யுமுன்
செல்லாண்டியம்மனுக்கும் களியாட்டம்
செய்யவேண்டியது'

என்று எழுதப்பட்டுள்ளது. பல பட்டயங்களில் இதன் நகல் காணாமல் போனால், அல்லது பொய்யென்றால்

'மதுக்கரைச் செல்லாண்டியம்மன்
கோயிலில்ப் போய்ப் பார்த்துக்கொள்ள
வேண்டியது'

என எழுதப்பட்டுள்ளதைக் காணுகிறோம்'

பல செல்லாண்டியம்மன் கோயில்கட்குப் பாடல்கள் பாடி மகிழ்ந்தனர். செல்லாண்டியம்மன் மீது

'அத்தருடன் நடனமிடு பத்திரகங் காளி
அம்புவிக்குத் தாயாக வந்தருளும் காளி
சத்துரரை மட்டடக்கி நிறுத்துமக மாயி
சதகோடி அலகைபடை சூழவரு தாயி

முத்துவட மிட்டருளும் உற்றகிரு பாலி
மோதுபுகழ் (கீரைநகர்) மேவும்அனு கூலி
பத்திமிகு அடியவரை லட்சிகவு மாரி
பத்தர்புகழ் செல்லாண்டி அம்மைநா யகியே!

செல்லாண்டி அம்மை நாயகியை 'செல்வநாயகி' என்று கீரனூர்க் காணியாளர்கள் அன்புப் பெயர்சூட்டி வணங்கி மகிழ்வதும் பொருத்தமுடையதாகவே காணப் படுகிறது.

கீரனூர்க் காணியாளர்கள்,

**'வண்டமரும் கூந்தல் வளரும்செல் லாண்டியம்மன்**
**தண்டா மரையாம்நல் தாள்பணிவோர்'**

என்று புகழப்படுகின்றனர்.

**'வல்லாண்மை கொண்டுநித்தம்**
**மறையவர்க்குச் சொன்னமிட**
**செல்லாண்டி அம்மனுட**
**சீர்பாதம் போற்றி செய்வார்'**

என்பன செல்லாண்டியம்மனைப் புகழும் இலக்கிய வரிகளாகும்.

கொங்கு வேளாண் பெருமக்கள் தம் குழந்தைகட்குச் செல்லம்பன், செல்லம்மாள், செல்லாயி, செல்வநாயகி என்று பெயர் வைத்து மகிழுவதும் செல்லாண்டியம்மன் நினைவிலேயாகும்.

கொங்கு வேளாளர்கள் குலங்களில் சுமார் 53 குலத்தார் தங்கள் குலதெய்வமாகச் செல்லாண்டியம்மனை வழிபடுவது தெரியவந்துள்ளது. கொங்கு நாட்டில் உள்ள அம்மனின் அருள்மிகு ஆலயங்களில், குலதெய்வக் கோயில்களில் செல்லாண்டியம்மன் கோயிலே மிகுதி. அதனால் கொங்கு வேளாளப் பெருமக்களின் உரிமைத் தெய்வம், தேசியக் கடவுள் செல்லாண்டியம்மனே என்று கூறினால் அது மிகையான கூற்றல்ல; உண்மையே என்பது விளங்கும்.

# செல்வநாயகியம்மன் கோயில்

கீரனூர்க் காணியாளர்கள் ஆறு கொங்கு வேளாளர் குலத்தினருக்கும், மார்க்கண்டேய கோத்திரத்து ஆதிசைவக் குருக்கள்மாருக்கும் குலதெய்வமாக விளங்கும் கோயில் செல்வநாயகியம்மன் கோயில்.

பொதுவாக அம்மன் ஆலயங்கள் வடக்கு நோக்கி இருப்பது சிறப்பு மிக்கதாகும். 'வடவாயிற் செல்வி' என அம்மன் அழைக்கப்பட்டதைப் பல ஆவணங்கள் கூறுகின்றன. செல்வநாயகியம்மன் கோயில் வடக்கு நோக்கி உள்ளது.

கொங்கு நாட்டு ஆலய வழக்கப்படி தீபத் தம்பம் கோயிலுக்கு வெளியே உள்ளது. தீபத் தம்பம் ஒரேகல்லில் அமைக்கப்பட்டு ஓங்கி உயர்ந்து மண்டபத்துடன் விளங்குகிறது. மண்டபத் தூண்களில் அடியார்கள், காணியாளர் சிற்பங்கள் காணப்படுகின்றன.

தீபத்தம்பத்தின் வடபுறம் சூலமும், கிழக்கில் அடியாரும், தெற்கில் தம்பதியினராகிய அடியாரும், மேற்கில் பெண் அடியாரும் காமதேனுவும் சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளனர்.

இராசகோபுரம் புராண சமயச் சிற்பங்களுடன் வண்ணச் சுதை வேலைப்பாட்டில் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள இராசகோபுரத்தை அடுத்து தூரி. சூலம், பலிபீடம், ஆலயமணி, சிம்மவாகனம் ஆகியவை வரிசையில் அமைந்துள்ளன.

செல்வநாயகியம்மன் சன்னதியின் முன் மேல்புறம் கிழக்கு நோக்கி இரண்டு குதிரைகளும், கீழ்புறம் மேற்கு நோக்கி ஆறு குதிரைகளும் மிகமிக அழகிய உருவங்களாக நிமிர்ந்து நிற்கின்றன, அவை வண்ண வேலைப்பாடு கொண்டவை. சேணத்துடன் குதிரைக்கு வேண்டிய அனைத்துக் கருவிகளுடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

பாண்டவர்கள் ஐவரில் நகுலன் அசுவ (குதிரை) சாஸ்திரத்தில் மிக வல்லவன். கீரனூர்க் காணியாளர்கள்.

**'பரிக்கு நகுலன்'**
**'கடியபரி முனை பெற்றவன்'**

என்று புகழப்படுகின்றனர். கீரனூரில் வாழ்ந்த அந்துவ குலப் பெத்தான் செல்லப்ப கவுண்டர் என்பவர் குதிரை ஏற்றத்தில் மிக வல்லமை பெற்று விளங்கியதாகத் தனிப்பாடல் ஒன்று கூறுகிறது. அவரிடம் 'நீலவேணி என்னும் குதிரை இருந்ததாக ஒரு ஆவணம் கூறுகிறது.

மொத்தம் எட்டுக் குதிரைகள் உள்ளன. ஆதி குலத்தாருக்கும் காடை குலத்தாருக்கும் இரண்டிரண்டு குதிரைகள் உள்ளன. மற்ற அந்துவன், கீரை, விலையன், தேவேந்திரன் குலத்தாருக்கு ஒவ்வொரு குதிரைகள் உள்ளன.

மேற்கே காடை குலத்தார், ஆதிகுலத்தார் குதிரைகளும், கிழக்கே ஆதி குலத்தார், அந்துவன் குலத்தார்,

காடை குலத்தார், கீரை குலத்தார், வெலைய குலத்தார், தேவேந்திர குலத்தாரி குதிரைகள் உள்ளன.

'அட்டதிக் கஜங்கள்' என்பது வழக்கு. அதுபோல் இவை அட்டத்திக்கு அசுவங்கள்' என்று கூறத்தக்க வகையில் அரிய வேலைப்பாடுகளுடன் பெரிய அளவில் அமைந்துள்ளன.

செல்வநாயகியம்மன் கோயில் புறச் சுவர்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன, தூண் முகப்புச் சிற்பங்கள், பூதகணங்கள், மயில், தாந்திரிகச் சிற்பம், மீன் ஆகிய சிற்பங்கள் உள்ளன.

செல்வநாயகியம்மன் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபங்களுடன் விளங்குகின்றது. மகாமண்டபம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முற்பகுதி தூண்கள் இல்லாமலும், பிற்பகுதி அழகிய நான்கு தூண்களுடனும் காணப்படுகின்றன,

தூண்களில் அன்னம், யானை, சிங்கம், சங்கு, சக்கரம், சூலம், லிங்கம், அடியார், அடியார் தம்பதிகள் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. விதானத்தில் இராகு, கேது ஆகியோரின் சிற்பங்களும், மீன், பாம்புச் சிற்பங்களும் உள்ளன. மகா மண்டப வாயிலில் ஆண், பெண் பூதங்கள் உள்ளன.

கிழக்குப் பிராகாரத்தின் வடபகுதியில் உள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கிக் காவல்தெய்வம் கருப்பண சாமி, பேச்சியம்மன் சன்னதி உள்ளது. அடுத்துள்ள மண்டபத்தில் பல அடியார் சிற்பங்கள் உள்ளன. அவை காணியாளர்களின் முன்னோர்கள் ஆவர்.

கருப்பணசுவாமி சன்னதியில் பிராமணி, நாராயணி, மகேஸ்வரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி எனப்படும் சப்தகன்னியருக்கும் சன்னதி உள்ளது.

காணியாளர்கள் கோயிலுக்கு வந்து வழிபட்டுத் தங்கிச் செல்லவும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தவும் எல்லா வசதிகளும் நன்கு செய்ய பட்டுள்ளன. வசதியான திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

செல்வநாயகியம்மன் கோயிலில் பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர். கோமணாண்டிகள் என்னும் பிரிவைச் சேர்ந்த 30 குடும்பத்தார் அர்ச்சகம் செய்து வருகின்றனர்.

கி.பி. 1529 ஆம் ஆண்டு கீரனூர்க் காணியாளர்கள் ஆறுகுலத்தார்களும் இணைந்து கோயிலுக்கு அளித்த கொடை பற்றி விநாயகன் கோயில் எதிரில் உள்ள பழங் கல்வெட்டுக் கூறுகிறது. கி.பி. 1589 ஆம் ஆண்டு செய்த கோயில் திருப்பணிகள் செல்வநாயகி கோயில் ஆவணம் ஒன்றின் மூலம் தெரியவருகிறது. 25.9.1919 அன்று காணியாளர்கள் அனைவரும் கூடிச் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் செல்வநாயகி அம்மன் ஆலயத் திற்குச் செய்யவேண்டிய பல பணிகள் பற்றிச்சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது, 1972 ஆம் ஆண்டு பல திருப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு 19.3.1975 அன்று திருக்குட முழுக்கு விழா நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டு தம்ம ரெட்டிபாளையம் டி.எம். பாட்டையகவுண்டர், திருப்பூர் எம், வெங்கடாசலக் கவுண்டர் உள்ளிட்ட பல காணி யாளர்களால் பட்டுவரிக்கற்கள் பதிக்கப் பெற்றன.

திருமணமண்டம் 20.10.1983 அன்று கால்கோள் விழாச்செய்யப்பெற்று 4.2.1985 அன்று திறப்புவிழா நடைபெற்றது ஆறு காணியாளர்கள் பெரும்பொருள் உதவியால் அம்மண்டபம் அழகியமுறையில் கட்டப்பட்டுள்ளது.

25.7.1984 அன்று 'காங்கேய நாடு கீரனூர் கொங்கு வேளாளர் அறக்கட்டளை' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் ஒன்று அமைக்கப்பட்டது. அதில் டிரஸ்டிகளாகக் கீழ்க்கண்ட ஒன்பது காணியாளர்தேர்ந்தெடுக்கப்பட்டனர் (1) எஸ்.என். கோவிந்தசாமிக் கவுண்டர் (தலைவர்) (2) எஸ்.எம். சென்னிமலைக் கவுண்டர் (உபதலைவர்), (3) டி.எம். பாட்டையகவுண்டர் (பொருளாளர்), (4) சி. பழனிச்சாமிக் கவுண்டர் (செயலாளர்), (6) ஏ.என். ரங்கசாமி கவுண்டர் (7) எம். அப்புக் குட்டிக் கவுண்டர் (8) நாச்சிமுத்துக் கவுண்டர் (9) சி.கே. சங்கரப்ப கவுண்டர் (உறுப்பினர்கள்)

1986 முதல் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குதிரை வாகனங்களும் அழகிய முறையில் அமைக்கப்பட்டு 9.2.1989ஆம் ஆண்டு குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெற்றது.

இப்போது பல்வேறு திருப்பணிகளுடன் 9.7.92 அன்று சிறப்பாகக் குடமுழுக்குவிழா நடைபெறுகிறது.

இப்போதைய திருப்பணி வேலைகளை காங்கயம் பழனிச்சாமிக் கவுண்டர், தம்மரெட்டிபாளையம் டி. எம். பாட்டையகவுண்டர், செல்லப்பம்பாளையம், எஸ்,எம், சென்னிமலைக்கவுண்டர், தம்மரெட்டிபாளையம் நாச்சிமுத்துக்கவுண்டர்; சூலக்கல் நாட்டராயக் கவுண்டர், திட்டம்பாளையம் அப்புக்குட்டிக் கவுண்டர் ஆகியோர் சிறப்புடன் செய்து வருகின்றார்.

எப்பொழுதும் கீரனூர்க் காணியாளர்கட்கு, கல்வெட்டு என்றால் மிகவும் விருப்பம் 15 ஆண்டுகட்கு முன்பே இந்நூலாசிரியரை அழைத்து நத்தவிநாயகர் கோயில் கல்வெட்டைப் படி எடுத்துப் பாதுகாத்து அதனைக் கோயில் தொடர்பான வழக்கிலும் சாட்சிய மாகப் பதிவு செய்து அதன் மூலம் வெற்றியும் பெற்றுள்ளனர். நத்தக் கல்வெட்டை எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இப்போதைய தமிழ் எழுத்தில் சலவைக் கல்லில் பொறித்துக் கோயிலில் வைத்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

1976 இல் பட்டுவரிக்கல் பதித்த நிகழ்ச்சிகள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவை இப் போதும் தரையில் பதிக்கப்பட்டுள்ளது.

விஜயரங்கன்வலசு சிதம்பரக் குருக்கள் மகன் சுந்தரக் குருக்களும் அவருடைய மக்கள் சிவராஜக் குருக்களும், அருணந்திக் குருக்களும் தங்களுக்குப் பாத்தியப்பட்ட இடத்தையும், சென்னிமலை பாளையம், நாச்சிமுத்துக் கவுண்டர் மகன் என். செல்லப்பகவுண்டர் தனக்குப் பாத்தியப்பட்ட இடத்தையும் கோயிலுக்குக் கொடுத்ததைக் கல்வெட்டு மூலம் சலவைக் கல்லில் விளக்க மாகப் பொறித்து வைத்துள்ளனர். இப்பொழுது நன்கொடையாளர்கள் பெயர்களும் சலவைக்கற்களில் பொறிக்கப்பட்டுள்ளது,

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பொதுக் கோயில்களை நிர்வாகம் செய்து வருகிறது, கொங்கு வேளாளர்களில் ஆதி, அந்துவன, காடை, விலையன், தேவேந்திரன், கீரை குலத்தார்க்குமட்டுமே உரியதாகக்

உள்ள ஆறு குலத்தாரின் முன்னோர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டு திருவிழாக்கள் எடுக்கப்பட்டு, நிர்வாகம் செய்து வந்த செல்வநாயகியம்மன் கோயிலை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டது.

அம்முயற்சியை எதிர்த்து ஆறு குலத்தார்களின் தனிப் பட்ட கோயில் என்று கீரனூர்க் காணியாளர்கள் ஒன்று பட்டு கோவை துணை ஆணையரிடம் விண்ணப்பித்தனர். அவர் அதனைத் தள்ளுபடி செய்து காணியாளர்கட்கு எதிராகத் தீர்ப்பளித்தார்.

காணியாளர்கள் தொடர்ந்து விடாமல் சென்னை அறநிலைய ஆணையாளரிடம் மேல் முறையீடு செய்தனர். அவரும் கோவை துணை ஆணையர் தீர்ப்பை உறுதிப் படுத்திக் காணியாளர்கட்கு எதிராகத் தீர்ப்பளித்து விட்டார்.

காணியாளர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட வில்லை. செல்வநாயகியம்மன் அருளுடன் ஈரோடு சார்பு நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். பின் வழக்கு தாராபுரம் சார்புநீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டது.

செல்வநாயகியம்மன் கோயில் காணியாளர்கள் சாரிபில் திருவாளர்கள் டி.எம். பாட்டைய கவுண்டர்' எஸ்.என். கோவிந்தசாமிக் கவுண்டர், சென்னிமலைக் கவுண்டர், நாச்சிமுத்துக் கவுண்டர், அப்புக்குட்டிக் கவுண்டர், சி. நாச்சிமுத்துக் கவுண்டர் ஆகியோர் வழக்கைச் சந்தித்தனர்.

காணியாளர்கள் சாரபில் கல்வெட்டு, ஓலைச் சுவடி, பழைய கோயில் ஆவணங்கள், குடமுழுக்கு விழா அழைப்

பிதழ்கள், அறிக்கைகள், புகைப்படங்கள், கோயில் குழுக்களின் நடவடிக்கைகள் ஆகியன சாட்சியமாக அளிக்கப்பட்டன. டி.எம். பாட்டைய கவுண்டர் அவர் களும், நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களும் கோர்ட்டில் மிகவும் திறமையாகவும் ஆதாரங்களுடனும் சாட்சியம் அளித்தனர்.

இந்நூலாசிரியர் படித்து எழுதித் தந்த நத்த விநாயகர் கோயில் எதிரில் உள்ள விசயநகர அரசர் காலக் கல்வெட்டு முக்கியமான ஆதாரமாகப் பயன் பட்டது.

செல்வநாயகியம்மன் காணியாளர்கள் சார்பில் வழக்கறிஞர்களும் திறமையாக வாதாடினர். இறுதியில் தாராபுரம் சார்பு நீதிமன்ற நடுவர் 24-4-1987 அன்று கீரனூர்க் காணியாளர்கள் சார்பில் தீர்ப்பளித்தார். செல்வநாயகியம்மன் அருளால் பரம்பரை பரம்பரையாக நிர்வகித்து வந்த தங்கள் குலதெய்வத் திருக்கோயிலைக் காணியாளர்கள் அரசுத் துறையிடமிருந்து மீட்டனர். ஒற்றுமையாகப் பணிபுரிந்து தக்க ஆதாரங்களை அளித்து திறமையாகச் சாட்சியம் அளித்து தம் காணிக் கோயிலை மீட்ட கீரனூர்க் காணியாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை செல்வநாயகி யம்மன் ஆலய நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்றும் நிருவாகத்தின் பொருட்டு அரசுத் துறையினர் கோயிலுக் குள் நுழையக்கூடாது என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

# கீரனூர்க் கோயில்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. கீரனூரில் சிறப்புமிகு பல கோயில்கள் உள்ளன. அவற்றில் காணியாளர்கள் வழிபட்டு, விழா நடத்தித் தேவையான திருப்பணிகள் செய்து பேறு பெற்று வருகின்றனர்.

## விநாயகர்

நத்தமேட்டில் இருந்த விநாயகர் இப்போது மாரியம்மன் கோயிலின் தென்புறம் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். மாரியம்மன் கோயிலுக்கு எதிரிலும் விநாயகர் கோயில் உள்ளது. ஆதிசுவரன் கோயிலின் உள்ளும், செல்வநாயகியம்மன் கோயில் அருகிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன.

செல்வநாயகியம்மன் தீபத்தம்பம் வடகிழக்குத் தூணில் விநாயகர் சிற்பம் உள்ளது. வீர நாராயணப் பெருமாள் கோயிலின்உள் இரண்டு 'கணேசாழ்வார்' சிறிய அளவில் எழுந்தருளியுள்ளனர்.

## ஆதிசுவரர்

கீரனூர் சிவபெருமானுக்கு ஆதீசுவரன் என்று பெயர். அம்மன் அகிலாண்டேசுவரி. காங்கேய நாட்டில் பழம் பெரும் காணி ஊர்களில் உள்ள சிவபெருமான், அம்மன் பெயர்களைத் தொகுத்துக் கூறும் பாடலில்,

'பரிதிமதி சூழ்கின்ற கீரனூர்த் தயாபரர்'

என்று சிவபெருமான் ஆதீசுவரன் புகழப்படுகிறார். அம்மன் ஆகிலாண்டேசுவரி.

'பண்பான கீரனூர் அகிலாண்ட வல்லி'

என்ற தொடரால் குறிக்கப்படுகிறார். அம்மனுக்குத் திருவானைக்காவல் அப்புத் (நீர்) தலத்தின் அம்மன் பெயரான அகிலாண்டேசுவரி என்று பெயர் இருப்பதால் இங்குள்ள தீர்த்தத்தில் எப்பொழுதும் தண்ணீர் தீருவ தில்லை என்பது ஐதீகம்,

பொதுவாகச் சிவாலயங்களில் அம்மன் கோயில் இடப்பக்கம் இருப்பதுதான் மரபு. ஆனால் கீரனூரில் சிவபெருமானுக்கு வலப்பக்கம் அம்மன் எழுந்தருளி யுள்ளார். வலப்பக்கம் அம்மன் கோயில்கள் இருந்தால் அங்கு அகத்தியர், சிவன்-பார்வதி திருமணக் கோலத்தைத் தரிசித்த இடம் என்பது மரபு.

சிவபெருமான் திருமணத்தின்போது வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அதைச் சமப்படுத்த அகத்தியரைத் தென்திசைக்குச் சிவபெருமான் போகுமாறு கூறினார். இறைவன் திருமணக் கோலத்தைக் காணாமல் எவ்வாறு போவது என்று கூறிய அகத்தியருக்குச் சிவபெரு மான் தன்னை நினைத்த இடத்தில் தான் தன் திருமணக் கோலத்தைக் காட்டுவதாகக் கூறித் தென்திசை அனுப்பி னார். அதற்கேற்ப வலப்பக்கம் அம்மன் உள்ள இடங்களில் அகத்தியர் வந்து தரிசித்ததாகக் கூறுவர். அவ்விடங் களில் நம் கீரனூரும் ஒன்றாகும்.

கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய வற்றுடன் கோயில் விளங்குகிறது. மகாமண்டபத்தில் உள்ள நான்கு தூண்களில் அழகிய பல சிற்பங்கள் காணப் படுகின்றன.

ஆதீசுவரர் சன்னதிக்கும், அகிலாண்டேசுவரி சன்ன திக்கும் இடையில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிர மணியர் கோயில் உள்ளது. இவ்வாறு அமைவது சோமாஸ் கந்தவடிவான கோயில் என்பது ஐதீகம்- வழிபடுவதற்குச் சிறந்த ஆலயமாகும்.

தனிப்பாடலில் ஆதிசுவரர், அகிலாண்டேசுவரி சிறப் பாகக் குறிக்கப்படுகின்றனர்.

'சீர்கொண்ட வடிவுற்ற ஆதீச லிங்கரும்
தேவிஅகி லாண்டவல்லி'

'கங்கைமதி புனைகின்ற ஆதீசர் தன்னைக்
கவுரிஅகி லாண்டஉமை'

என்பது தனிப்பாடல் பகுதிகளாகும்.

சிவாலயத்தினுள் தொன்மையான நந்தி சிலைகளும், அடியவர் சிலைகளும் காணப்படுகின்றன. தல விநாயகர் கோயில் மேற்குப் பகுதியில் உள்ளது. வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்கள் உள்ளன. வடக்கில் பைரவரும், தெற்கில் சூரியனும் உள்ளனர். ஆண்டுக்கு ஓரிரு நாட் களில் ஆதீசுர லிங்கத்தின் மீது சூரிய ஒளிபடும் சூரிய பூசையும் இத்தலத்தில் நடைபெறுகிறது. சண்டிகேசுவரர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் விதிப்படி அமையவேண்டிய இடங்களில் எழுந்தருளியுள்ளனர்.

## வீரநாராயணப் பெருமாள்

சிவாலயத்தின் தென்பகுதியில் கிழக்கு நோக்கி வீரநாராயணப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. தாயாருக்குத் தனிச் சன்னதியில்லை. வீரநாராயணப் பெருமாளின் இருபுறமும் சீதேவி, பூதேவி எழுந்தருளி யுள்ளனர். இத்தல சீதேவி, பூதேவியர்க்கு வீரவல்லி, வேதநாயகி என்று சிறப்புப் பெயர்கள் உள்ளன.

கீரனூர்த் தனிப்பாடல் ஒன்றில்
'கரியமால் வீரநா ராயண முராரியைக்
கமலவாகனச் செல்வியை'

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. கருவறை, அர்த்த மண்டபம் மட்டும் உள்ள சிறுகோயில்,

அர்த்த மண்டபத்தில் கருடாழ்வார், நாகர், அனுமார், கணேசாழ்வார் ஆகியோர் உள்ளனர். வெளியே தனியாகக் கருட கம்பம் உள்ளது. அவற்றில் சங்கு சக்கரம் அனுமார் ஆகிய உருவங்கள் உள்ளன.

இப்பெருமாள் கோயிலுக்குத் தனியாக அர்ச்சகர் இல்லை. சிவால்யக் குருக்களான மார்க்கண்டேய கோத்திரம் மு. இராசாமணிக் குருக்கள் அவர்களே பூசை செய்து வருகின்றனர்.

## துக்காச்சியம்மன்

சோழன் பூர்வ பட்டயத்தில் சேரமான் பெருமாள் அனுமதியுடன் கரிகால சோழன் கட்டிவைத்த கோயிலில் எழுந்தருளச் செய்த துர்க்கையம்மன், துக்காச்சியம்மன்

என்னும் பெயருடன் கீரனூர்க்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

துக்காச்சிகாடு சூழ்ந்த பகுதியில் உள்ள அக்கோயி லுக்குச் சிறு இட்டேறியே வழியாக அமைந்துள்ளது. கோயிலில் கட்டிடங்கள் ஏதுமில்லை. வடக்கு நோக்கி 4 திருக்கரங்களுடன் துர்க்கை எழுந்தருள்விக்கப்பட்டுள்ளது. மிகவும் பழமையான சிற்பம். கொங்கு நாட்டின் தொன்மையான துர்க்கை சிற்பங்களுள் ஒன்றெனக் கூறலாம். சோழன் பூர்வ பட்டயத்தில் உத்தரவாசலாகத் துர்க்கையை எழுந்தருள்வித்ததாகவே கூறப்படுகிறது. அதற்கேற்ப அம்மன் வடக்கு நோக்கியே உள்ளார்.

அருகில் உள்ள சென்னிமலைபாளையம் பூசாரி பூசை செய்கிறார். சென்னிமலைபாளையம் உள்ளூர் மாகாளி யம்மனுக்குப் பொங்கல் வைக்கும்போது இத்துர்க்கை யம்மனுக்கும் பொங்கல் வைப்பர். கீரனூரில் எந்தக் கோயில் விழாவாக இருப்பினும் முதல் பூசை பெறுபவர் இத் துர்க்கையம்மன் தான்.

மக்கென்சி குறிப்பொன்று துர்க்கை ஆட்சி—துக் காச்சியென மாறும் என்று குறிக்கிறது. துக்காச்சியம்மன் பெயர் கீரனூர் பற்றிய தனிப்பாடல் ஒன்றில் வருகிறது.

## மாரியம்மன்

மழைத் தெய்வம் அல்லது கண்ணகி வழிபாட்டின் அம்சம் என்று ஆய்வாளர்கள் கூறும் மாரியம்மன் கோயில்கள் இங்கு உள்ளன. கீரனூர்க் கிராமத்தில் உள்ள எல்லா உட்கிராமக் காணியாளர்களும் வழிபடும் மாரியம்மன் கோயில் ஒன்றுள்ளது. அக்கோயில் திருப்

பணி செய்யப்பட்டு 24-8-1988 அன்று குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது. நாடார் சமூகத்தினர், பண்டாரம் சமூகத்தினர், செங்குந்தர் சமூகத்தினர் வழிபடக்கூடிய கோட்டை மாரியம்மன் கோயில் ஒன்றும் இங்குள்ளது. செங்குந்தர்களில் ஒரு பிரிவினருக்குக் கீரனூரார் வம்சம் என்பது பெயர். சோழன் பூர்வ பட்டயத்தில் கீரனூரில் கோட்டையும், பேட்டையும் அமைத்த விபரம் கூறப் பட்டுள்ளது, அத்துடன் திருக்குளமும் அமைத்துள்ளனர். அக்குளம் சிதைந்து சிவாலயத்தின் வடக்குப் பக்கம் உள்ளது. இன்றும் பழைய தெப்பக்குளம் போன்று அங்கு காட்சியளிக்கிறது.

## பிரம்மா

பிரம்மாவுக்குத் தனியாகக் கோயில்களோ அல்லது சன்னதிகளோ அமைக்கப்படுவதில்லை. மேல்கரை அரைய நாட்டுத் தலமும் சைவ சமயகுரவர்கள் நால்வரும் பாடிப் பரவிய தலமும் ஆன கொடுமுடியில் மகுடேசுவரர் ஆலயத்தில் பிரம்மாவிற்குத் தனிச் சன்னதி உள்ளது.

காங்கேய நாட்டின் 14 ஊர்களில் கீரனூரில் மட்டுமே பிரம்மாவிற்குத் தனிச் சன்னதி ஆதிசுவரர் திருக்கோயில் வளாகத்தில் உள்ளது. சிவலயத்தின் கிழக்குப் பகுதியில் அமர்ந்த திருக்கோலத்தில் நான்முகம் தாங்கி பிரம்மா கிழக்கு நோக்கியுள்ளார்.

ஆதிசுவரர் ஆலயத்தில் சிவன், திருமால், பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளும் உள்ளமை சமயச் சிறப்பு வாய்ந்ததாகும்.

# கீரனூர்க் கல்வெட்டுக்கள்

## சிவன் கோயில் கல்வெட்டுக்கள்

கீரனூர் ஆளுடையார் ஆதி நாதேசுவரம் உடையார் கோயிலினுள் ஒன்பது கல்வெட்டுக்கள் படி எடுக்கப் பட்டுள்ளன. அக் கல்வெட்டுக்களை 1920 ஆம் ஆண்டு மத்தியத் தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர். ஆண்டறிக்கையிலும் அக் கல்வெட்டுக்களின் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றின் மூலபாடம் இன்னும் வெளிவரவில்லை.

ஈசுவரன் கோயில், அம்மன் கோயில், விநாயகர் கோயில், பெருமாள் கோயில் ஆகிய இடங்களில் அக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஐந்து கல்வெட்டுக் கள் கொங்குச் சோழருக்கு உரியவை. கொங்குப் பாண்டியருக்கு உரியவை மூன்று கல்வெட்டுக்கள். பாப்பினித் தோடகுலத்துத் தலைவன் கல்வெட்டு ஒன்று.

சிவாலய அர்த்த மண்டப உள்சுவரில் கொங்குச் சோழ மன்னன் இராசாதிராசனின் மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது. அரசனே தேவதான இறையிலியாகக் கோயிலுக்கு நிலம் அளித்து அதன்மூலம் பூசை நடைபெறச் செய்த செய்தியைக் கூறுகிறது (எண் 249).

அம்மன் கோயில் மண்டபத் தூணில் கொங்குச் சோழ மன்னன் வீரராசேந்திர தேவனின் 15 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. அத் தூண்களுக்கு 'நாயகக் கால்' என்று பெயர் கூறப்படுகிறது. இளைய செல்வரையன் என்னும் கீரனூர் இஞ்சிவேளான் இட்ட தூண்கள் பற்றியது இக் கல்வெட்டு (எண் 250).

விநாயகர் கோயிலில் வடக்குப் பக்கமும் தெற்குப் பக்கமும் கொங்குச் சோழன் வீரராசேந்திர தேவனின் 19, 20, ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. சித்திரமேழி ஆசாரி 9 அச்சுக் கொடுத்து இடங்கை விநாயகப் பிள்ளையாரை எழுந்தருள்வித்த செய்தியும், இறைவன் வழிபாட்டுக்குக் கம்பு கொடுத்த செய்தியும் கூறப்படுகின்றன (எண்கள் 252, 255). திரிபுவன வீரதேவனின் 6 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சோழிய நாழி என்னும் அளவையால் கம்பும் நெல்லும் கொடுத்த செய்தியைக் கூறுகிறது (எண் 254).

சிவாலயத்தில் நிலை கால்களில் கொங்குப் பாண்டியன் வீரபாண்டியனின் 16 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், குலசேகர பாண்டியனின் 4 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் உள்ளன. அவை கீழ்க்கரையைச் சேர்ந்த தலைவன் பெரியஅரசு அழகியபிள்ளையும், மேல்கரையைச் சேர்ந்த தலைவன் சொக்க ஊரணியாரும் அளித்த நிலைகளைப் பற்றிக் கூறுகின்றன. (எண்கள் 247, 248).

விநாயகர் கோயில் வடக்குப் பக்கம் கொங்குப் பாண்டியன் வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. ஆசாரி ஒருவன் விநாயகர்

ரகாயிலில் தாமப்படை அமைத்ததைக் கூறுகிறது. இச் சொல்லை மத்திய அரசு கல்வெட்டுத் துறையினர் தர்மப்படை என்று படித்துள்ளனர் (எண் 253).

வீரநாராயணப் பெருமாள் கோயிலில் காங்கேய நாட்டுச் சுங்கம் வசூலிக்கும் உரிமை உடைய தோடகுல மண்டர் கூத்தன் செய்த கொடை ஒரு பிற்காலக் கல்வெட்டாக உள்ளது (எண். 251)

## நத்தவிநாயகர் கோயில் கல்வெட்டு

கீரனூர் நத்தவிநாயகர் கோயில் எதிரே நடப்பட்டுள்ள குத்துக்கல் ஒன்றில் விசயநகர மன்னர் அச்சுத தேவராயர் காலத்தில் கீரனூர்க் காணியாளர்கள் அறுவரும் சேர்ந்து அளித்த கொடைச் செய்தி கூறப்பட்டுள்ளது.

'சாலிவாகன சகாப்தம்' 1413 மேல் செல்லாநின்ற ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் 1 தேதிக்கு அச்சுதமகாராயர் காரியத்துக்குக் கடவதான அண்ணரய்யன் அவர்களுக்குச் செல்லாநின்ற காலத்துக் காங்கய நாட்டுக் கீரனூரில் வேளாளன் அந்துவரில் செயராசக் கரியவாண்டாரும், சிறு ராசாவும் மேற்படியூரில் உள்ளூர்க் கொத்துக்காரன் ராக்கியாரும், தேவந்தைகளில் செல்லன் கூத்தரும், ஆதிகளில் நயினார் உலகுடையாரும், அந்துவரில் பிள்ளிராக்கியாரும், காடர்களில் இராக்கியார் முத்தணனும், விலையரில் ராக்கிய நல்லண்ணரும், தேவேந்தரில் செல்வன் கூத்தரும், கீரர்களில் முத்தண்ணனும் ஊரிலக்கத்தில் போகமா செல்லப்பிள்ளையாருக்கு ஊருக்கு உபயமிட்டுக் கொள்ளக்

கடவோம் என்பவர் தன் பொன் நாலும் இதற்கழிவு செய்தவன் அகவத்தி கோகத்தி பிரமஹத்தி முதலிய பாவத்திற்கு ஆளாவான். செல்வநாயகி ரட்சிப்பான்'

இக் கல்வெட்டு இன்னும் படி எடுக்கப் பெறாத புதிய கல்வெட்டு இக்கல்வெட்டை முதலில் படித்துப் பொருள் கூறித் திருப்பணிக் குழுவினர்க்கு எழுதித் தந்தவர் இந் நூலாசிரியரே ஆவார். இக் கல்வெட்டையே தக்க சாட்சியமாக அளித்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை எடுக்கவிருந்த கோயிலைக் காணியாளர்கள் மீட்டுள்ளனர். இன்று இக்கல்வெட்டு இக்காலத் தமிழ் எழுத்தில் சலவைக்கல்லில் வெட்டப்பட்டுச் செல்வநாயகியம்மன் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.